1442

# ஸ்ரீ பர்வத வர்த்தனி

1442
1·57

ஆசிரியர் : V. M. நடேச நாட்டார்

மலர் 1 | துன்முகி பங்குனித் திங்கள் மார்ச் 1957 | இதழ் 7

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 MAR 1957
MADRAS

பொருளடக்கம் — பக்கம்

1. சந்தா வேண்டுகோள் ... 195
2. காரியக்கமிட்டி கூட்டம் ... 196
3. ஹாஸ்டல் ஆண்டுவிழா ... 197
4. அஞ்சலையின் அதிர்ஷ்டம் ... [illegible]
5. திருக்குறள் ... 203
6. அவள் ? ... 205
7. உழைப்பு ... 207
8. பிரஞ்சில், வெயோன் புர்ழுவா ... 210
9. வைத்தியம் ... 211
10. புராணத்தில் நாம் ... 214
11. மன சிலை ... 217
12. யார் பெற்ற செல்வம் ... 219
13. இன்ப வாழ்க்கை ... 225

சென்னை மரகாணு
ராஜகுலசங்கம்
ாத வெளியீடு

விலை 4 அணா

JL
m211, M5658
M57·1·7
187250.

எல்லாவிதமான கைத்தறி ஜவுளிகளும்,

மில் ஜவுளிகளும், பல ரகங்களிலும்

விலை நயமாகக் கிடைக்கு மிடம்:-

**V. K. வேதகிரி நாட்டார் &**

**V. J முனிரத்தின நாட்டார்.**

*மில் மேட் & கைத்தறி ஜவுளி வியாபாரம்*

**விரிஞ்சிபுரம். (N. A. DT.)**

**ஜெயலக்ஷிமி ஸ்டோர்ஸ்**

**காட்டுமன்னார்கோயில், (S A. Dist)**

எங்களிடத்தில் எல்லாவிதமான பெங்களூர், பனாரஸ், காஞ்சிபுரம், சேலம் பட்டு, நூல், ஜரிகை புடவைகளும் வேஷ்டிகளும், பலரக துப்பட்டாக்களும் வாயல்களும் விலை சரசமாகவும் உத்திரவாதத்துடனும் கிடைக்கும்.

**V. P. சிவஞானம்**
உரிமையாளர்.

உ

பராசக்தி துணை

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு"

# பர்வதவர்த்தனி

"எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே".

| மலர் 1 | துன்முகி பங்குனித் திங்கள்<br>மார்ச் 1957 | இதழ் 7 |
|---|---|---|

1442
1-57.

## சந்தா செலுத்தி விட்டீர்களா?

## மாதம் 7 ஆயின!

## பர்வதவர்த்தனி

## வருட சந்தா

## ரூ. 3-0-0

## உடனே அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: சங்க பத்திரிகை சம்பந்தமான எல்லா கடிதமும் பணமும் 55, முத்துமாரி செட்டி வீதி, சென்னை-1 என்னும் விலாசத்திற்கே அனுப்பவேண்டியது.

ஆசிரியர்.

# காரியக் கமிட்டிக் கூட்டம்

*24-3-1957* ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குச் சென்னை ராஜ்ய பருவதராஜகுல சங்கக் காரியக்கமிட்டிக் கூட்டம் உயர்திரு. V. M. நடேச நாட்டார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. கூட்டுறவு கமிட்டி (ஸ்ரீ நாராயணசாமி பிள்ளை) யின் அறிக்கையைப் படித்துக் காண்பிக்கப்பட்டது. கமிட்டி கூறியுள்ள மீன் பிடிப்போர் கூட்டுறவு சங்க அபிவிருத்திக்கான 10 சிபார்சுகளை இக்கமிட்டி வரவேற்கிறது. இதனை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென சர்க்காரை இக்கமிட்டி கேட்டுக் கொள்ளுகிறது.

2. சமீபத்தில் சென்னை சர்க்கார் அமைக்க இருக்கும் மீன் வளர்ச்சி ஆலோசனைக் குழுவில் உள்நாட்டு மீனவர் பிரதிநிதியாக சென்னை ராஜ்ய பருவதராஜகுல சங்கக் கௌரவக் காரியதரிசி திரு. A. கோவிந்தசாமி நாட்டார் அவர்களை நியமிக்கவேண்டுமென்று சர்க்காரை இக்கமிட்டி கேட்டுக்கொள்ளுகிறது.

3. சென்னை ராஜ்ய மேல்சபை (M. L. C.) ஸ்தானத்துக்கு உள்நாட்டு மீனவ மக்களின் சார்பாக திருவாளர்கள் P. A. நடேசன் (சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி) A. V. குப்புசாமி (திருப்பாதிரிப்புலியூர்) இவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்படி இக்கமிட்டி முதன் மந்திரி கனம் K. காமராஜ் நாடார் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

4. 1-10-56-ல் வந்த G. O. 3696 சர்க்கார் உத்தரவையும், 2-2-57-ல் பிறப்பித்துள்ள Memo 11485/E—1//57 சர்க்கார் உத்தரவையும் கண்டிக்கவும், ஷை உத்தரவுகளை ரத்துசெய்யக்கோரவும், உள்நாட்டு மீன்வர் கூட்டுறவு சங்க மாநாடு ஒன்று சீக்கிரத்தில் நடத்த 30-3-57-ல், காட்டுமன்னார்குடியில் நடைபெறும் கமிட்டிக் கூட்டத்தில் முடிவு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

### சங்கத்திற்கு நன்கொடை.

சென்னை, V. K. சம்பந்த நாட்டார் தனது தம்பியின் திருமணத்திற்காக ரூ. 5/-ம், படுவூர் பொ. கன்னி நாட்டார் தம் மகள் திருமணத்திற்காக ரூ. 2/-ம் நன்கொடை அளித்தார்கள்.

சென்னை, பார்க்டவுன் திரு. R. முருகப்ப நாட்டார் தன் குமாரன் சீமந்தத்திற்காக ரூ. 2/- நன்கொடை அளித்துள்ளார்.

—o—

குலாபிமானிகள் சங்க அபிவிருத்திக்காக எல்லா விசேட காலத்திலும் நன்கொடை அளித்து உதவுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

(ஆசிரியர்.)

உ

சென்னை மாகாண

பர்வதராஜகுல ஏழைமாணவ இலவச ஊன் இல்லம்

காட்டுமன்னார்கோயில்.

# 11-வது ஆண்டு விழா அழைப்பிதழ்.

---

அன்புடையீர்!

நிகழும் துன்முகி ஆண்டு பங்குனித்திங்கள் 17-ம் நாள் சனிக்கிழமை (30-3-57) மாலை 4-30 மணிக்கு சென்னை மாநில ஹரிஜன ஷேமநல அதிபர்

உயர் திருவாளர்

## G. E. முத்திருளாண்டி I. A. S.

அவர்கள் தலைமையில் இல்லத்தின் 11-வது ஆண்டு விழா நடைபெறும். அன்று காலை 8-மணிக்கு கமிட்டி கூட்டம் நடைபெறும். அதுபோது தாங்கள் மன முவந்து வருகை புரிந்து விழாவைச் சிறப்பிக்கப் பெரிதும் வேண்டுகிறோம்.

---

M211,N56SP

# அஞ்சலேயின் அதிர்ஷ்டம்

(திரு. கு. பக்கிரிசாமி, ஆசிரியர், கடுங்குழி)

—(o)—

விடியற்காலே பறவைகள் தமது குரலால் ஊரை எழுப்பிக் கொண்டிருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் பெண்டீர் சாணம் தெளித்துக் கோலமிட்டுத் தமது வீடுகளே அழகுசெய்து கொண்டிருந்தனர். சில பெண்கள் குடத்துடன் குளத்துக்குச் சென்று கொண்டிருந்தனர். மேலத் தெரு குப்பு கவுண்டர் வீட்டின் எதிரில் பெரிய பந்தர்போட்டு வாழை, கமுகு முதலிய மரங்களே நட்டு அழகு செய்து இருந்தனர் உள் வாசல் அழகாகக் காட்சி அளித்தது. மணமேடையில் காண்போர் மனத்தைக் கவரத்தக்க அழகுடன் மணமக்கள் வீற்றிருந்தனர். கூடமெங்கும் ஜமக்காளங்கள் விரிக்கப்பட்டு ஆண்கள் ஒரு பக்கமும் பெண்கள் ஒரு பக்கமும் அமர்ந்திருந்தனர். எங்கும் பட்டுப்புடவை உராயும் சலசலப்பும், மல்லிகைப் பூவின் மணமும் அவ்வீட்டையே சுகந்தத்தில் ஆழ்த்திக்கொண்டிருந்தது. முகூர்த்த வேளே வந்துவிட்டது சீக்கிரம் ஆகட்டும் என்று குப்பு கவுண்டரின் குரல் கேட்டது. புரோகிதரும் தமது குரலே உயர்த்தி முகூர்த்தத்தை முடிக்கத் தொடங்கினர். கவுண்டரின் மனம் மகிழ்ச்சியால் துள்ளிக் கொண்டிருந்தது. அவர் தாம் செய்த தியாகத்தின் பலனே அறிந்தார். மாங்கல்யத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டார். மாங்கல்ய தாரணம் முடிந்து மணமக்களும் எழுப்பப்பட்டுப் பெரியோர்களே வணங்கிக் கொண்டுவந்தார்கள்.

பெரியவர்கள் ஆறுமுகத்தையும் அஞ்சலேயையும் வாழ்த்தினர். என்ன அதிசயம் குப்பு கண்டரின் மனேவி ஆகவேண்டிய அஞ்சலே ஆறுமுகத்தை மணந்துகொண்டாள்! அதுவும் கல்யாணம் அவராலேயே நடத்தப்படுவதுதான் அதைவிட மிகவும் ஆச்சரியம். அதோ மணமக்கள் அவரை வணங்குகின்றனர். அவர் என்ன சொல்கிருர் பார்ப்போம். எங்கோ நினேவாக நின்றுகொண்டிருந்த குப்பு கவுண்டரை ஆசிர்வாதம் செய்யுங்கள் என்ற மணமக்களின் குரல் தட்டி எழுப்பிற்று. அவர் கீழே குனிந்து இருவரையும் தூக்கி நிறுத்தி "அப்பா ஆறுமுகம்! சென்றதை மறந்துவிடு. இனி நீயே எனது மகன். என் சொத்து முழுவதும் உன் பேருக்கே எழுதிவிடுகிறேன். இன்று முதல் இதுவே உன் வீடு. குழந்தாய் அஞ்சலே! நீயே எனது மகள் என்னே உனது தந்தையாக நினேத்து எனக்குவேண்டியதைச் செய்து நான்செய்த அற்பத்தனத்தை மறந்துவிடு. உன் தந்தையையும் இங்கேயே அழைத்து வந்துவிடுகிறேன்" என்ருர். இவைகளேச் சொல்லும்போதே அவர் குரல் தழதழத்தது, கண்ணீர் சுரந்தது.

* * *

புதூர் மேலைத் தெருவிலே 30, 40, குடிசைகளிருந்தன. யாவரும் உழவு தொழிலையே மெற்கொண்டு திருப்தியுடன் வாழ்ந்துவந்தனர். கந்தசாமி கவுண்டர் தமது மனைவியுடனும் மகளுடனும் சந்தோஷமாக வாழ்ந்துவந்தார். காலம் மாறிற்று. மனைவி இறந்தாள். நிலம் நல்ல பலன் கொடுக்கவில்லை. தன் மனைவிக்கான செலவுக்குத் தமது நிலபுலன்களைப் பக்கத்தூர் முதலியாரிடம் ஈடுகாட்டி ரூ. 500 கடன் வாங்கினர். இரண்டு வருடம் விளைந்தால் கடனில் முக்கால் பாகம் தீர்ந்திருக்கும். விளைவில்லை. முதலியார் கடனுக்காக நெருக்கினர். கவுண்டரும் தமது சொத்துக்களை வேறு யாருக்காவது வைத்து வாங்கித் தருவதாகச் சொன்னர். அன்றிரவு தம்மகள் அஞ்சலையிடம் தமது கஷ்டங்களை ஒருவாறு சொன்னர். அஞ்சலை தனது தந்தையின் கஷ்டத்தை உணர்ந்து கவலையடைந்தாள்.

மறுநாள் அஞ்சலை வீட்டு வேலைமுடிந்து கஞ்சி எடுத்துக் கொண்டு, காலையில் வயலுக்குச் சென்ற தனது தந்தையின் கஷ்டத்தைப் பற்றி சிந்தித்துக்கொண்டே சென்ருள். எதிரே வண்டி ஒட்டிவந்த ஆறுமுகம் வண்டி நெருங்கியும் அஞ்சலை நகராததைக் கண்டு, குரல் கொடுத்தும் நகராமற்போகவே வண்டியை நிறுத்திக் கீழே குதித்து அஞ்சலையை அப்பால் இழுத்துவிட்டான். இருவருக்கும் ஏதோ மின்சார சக்தி பாய்ந்ததுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அஞ்சலை நாணத்துடன் சென்றுவிட்டாள். அவள் சென்ருளேஒழிய அவள் உள்ளம் ஆறுகத்திடம் சென்றுவிட்டது. ஆறுமுகமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்ருன். சாப்பிட உட்கார்ந்தான். அஞ்சலையின் முகம் வந்து நின்றது. சாப்பாடும் பிடிக்கவில்லை. ஆறுமுகம் அதே ஊரில் இருந்தும் அஞ்சலையை அதிகமாகப் பார்த்தது இல்லை. அவள் தன் தாய் இறந்த பின்னரே வெளியில்வர ஆரம்பித்தாள். கனவிலும் அவளைக் காணமல் இருக்க முடியவில்லை. எங்கும் அவளாகவே காட்சி தந்தாள் அவனுக்கு. காலையில் வயலுக்குச் சென்ருன். தனது வயலை தாண்டித்தான் கந்தசாமியின் நிலம் இருந்தது. அப்போதும் அஞ்சலை தன் தகப்பனுக்குக் கஞ்சிகொண்டு வந்தாள். அஞ்சலையின் அழகும் நடையும் அவனைச் சுழலவைத்தது. ஆறுமுகத்தைத் தாண்டிச் செல்லும்போது அஞ்சலை புன்னகை பூத்தாள். அவள் முகம் செக்கச்செவேரென்று இருந்ததைக் கண்ட ஆறுமுகம், வைத்த கண்ணை வாங்காமல் பார்த்துக்கொண்டே இருந்தான்.

கஞ்சியை எடுத்துச்சென்ற அஞ்சலை தந்தையைச் சாப்பிட அழைத்தாள். கிழவன் கால்வாயில் வைக்கக் கல்லைப் புரட்டும் போது கல்தவறிக் காலில் விழுந்துவிட்டது. ‘ஓ’ என்று கத்திவிட்டான். ஆறுமுகம் ஓடிச்சென்று கல்லைப் புரட்டித் தனது துண்டில் சிறிது கிழித்து இரத்ததைத்துடைத்து ஈரத் துணியால் கட்டிவிட்டான், கிழவன் ஆறுமுகத்தையும் சாப்பிடச் சொல்ல ஆறுமுகமும் இசைந்தான். அஞ்சலையின் சந்தோஷம் கரைபுரண்டது.

இவ்வாறு இவர்களின் காதல் வளர்பிறைபோல் வளர்ந்தது. ஆறுமுகத்திற்குத் தாய் தந்தையரில்லை. வீடும் அரை காணி நிலமும் உண்டு. மிகவும் யோக்கியன். கொஞ்சம் படித்தவன். பொதுக் காரியங்களில் உழைப்பவன். ஏழைகளுக்கு உதவி செய்வான் ஊரில் அவனுக்கு நல்லபெயர். அஞ்சலையும் ஆறுமுககும் தினமும் சந்தித்துத் தங்கள் காதலை வளர்த்துவந்தார்கள். ஒருவரைப் பாராமல் ஒருவர் இருக்கமுடியவில்லை. மணிக்கணக்காய்ப் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். பேச ஆரம்பித்தால் பொழுதுபோவதே தெரியாது. இரவின் தனிமை இருவரையும் வருத்திற்று.

இந்த சமயத்தில்தான் குப்புசாமிகவுண்டர் மலேயாவிலிருந்து வந்துசேர்ந்து, பெரிய வீடுகட்டி நிலபுலன்களை வாங்கிக்கொண்டு பெரிய மிராசுதாரராக விளங்கினார். எப்போதும் பட்டு ஜிப்பாவும், கைவிரல்களில் கல்லிழைத்த மோதிரங்களும், காலில் மிதியடியும் அணிந்து வாசனை த்திரவியங்களை பூசிக்கொண்டு ஆடம்பரமாகவே இருப்பார். ஐம்பதுக்குமேல் வயதான அவரைக் காண்பவர் நாற்பது வயதுதான் மதிப்பிடுவர். முதலியார் கடன் நெருக்கவே கந்தசாமி கவுண்டர் தமது சொத்துக்களை ஈடுகாட்டி குப்புசாமி கவுண்டரிடம் ரூபாய் 800 வாங்கி கடனை அடைத்துவிட்டு உழவு மாடும் வாங்கிக்கொண்டார். நாட்கள் ஓடிக்கொண்டிருந்தது. குப்பு கவுண்டர் தனது வயலுக்குச் செல்லுகையில் புள்ளி மான்போல் தனது எதிரேவரும் அஞ்சலையைக் கண்டு ஆச்சரியப்பட்டார். மற்றொரு நாள் ஆறுமுகத்துடன் அஞ்சலை சிரித்துப் பேசிக்கொண்டு வருவதைக் கவனித்தார். அவர்களைப் பற்றி விசாரித்தார். அப்பொழுதே அஞ்சலையை மணந்துவிட்டதாக எண்ணிக்கொண்டார். காலையில் தனது வேலையாளை அனுப்பி கந்தசாமி கவுண்டரை அழைத்துவரச் சொன்னார். அவர் வந்ததும் மரியாதையுடன் உட்காரவைத்து சிற்றுண்டிகொடுத்து உபசரித்துத் தனது கடனை இந்த மாதத்துக்குள் கொடுத்துவிடும்படி கூறிவிட்டுச்சென்றார். பின் தரசன் குண்டனை ஆளாக்கிக் கடன் பணம் வேண்டாம்; எப்படியாவது அஞ்சலையைப்பேசி மணம்முடித்தால் போதும்என அவனுக்கு 100 வெள்ளிக் காசை அள்ளிவீசினான். குண்டன் குடிகெடுப்பதில் சமர்த்தன். அவன் கந்தசாமி கவுண்டரை அணுகி மெள்ள விஷயங்களை விளக்கி, பணத்தாசை காட்டினான். கிழவன் சம்மதிக்காதது அறிந்தான். கடனைக்காட்டி அதனால் நிலம்போவதோடு வாழ்க்கையும் கெட்டு அவமானமும் நேரிடும் என்றும் பெண்ணைக் கொடுத்தால் கடனைக் கொடுக்கவேண்டாம் உன் பெண்ணும் பணக்காரியாவாள் உனக்கும் மதிப்பு உயரும் என்றும் பற்பலகூறினான். கிழவன் அஞ்சலையிடம் மெதுவாக விஷயத்தை சொன்னான். அதுகேட்ட அஞ்சலை இடியோசை கேட்ட நாகம்போல் நடுங்கித் தனது சொத்துக்கள் ஆறுமுகத்தின் சொத்துக்கள் யாவையும் விற்றுக்கொடுக்கலாம் என வாதாடினாள். கிழவன் அது எல்லாம் சரிப்படாதம்மா யாரும் வாங்குவாரில்லை; என்ன செய்வது என்று சொல்லி, கவலை

யுடன் அஞ்சலையின் காலைப்பிடித்துத் தன் மானத்தைக் காப்பாற்றும்படி மன்றாடினான். அஞ்சலை படுத்துத் தேம்பி தேம்பி அழுதுகொண்டே இருந்தாள்.

ஆறுமுகம் தனது கலியாணத்தை அடுத்த மாதம் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தமது மாமனிடம்சென்று விஷயத்தைக் கூறிவிட்டுத் தனது ஊர் திரும்பி, அஞ்சலையிடம்கூற அவள் வீட்டுக்கு ஆவலாக ஓடிவந்தான். அவனைக்கண்ட அஞ்சலை தன் முகத்தைத் தாழ்த்திக்கொண்டாள். கிழவன் வா தம்பி என ஈனஸ்வரத்தில் அழைத்தான். ஆறுமுகம் தன் மாமனிடம் சென்று வந்ததைக் கூறினான். கூறிக்கொண்டிருக்கும்போதே அஞ்சலை விம்மலானாள். "அஞ்சலை ஏன் அழுகிறாய்?" எனக் கிழவன் நாக்குழற நடந்த விஷயங்களைக் கூறினான். அதுகேட்ட ஆறுமுகம் தீயை மிதித்தவன்போல் அலறினான். என்ன சொல்லியும் கிழவன் சம்மதிக்கவில்லை. அஞ்சலையோ மயக்கம்போட்டு விழுந்துவிட்டாள். ஆறுமுகம் தள்ளாடிக்கொண்டே சென்றுவிட்டான். அதிலிருந்து காரியங்கள் துரிதமாக நடைபெறலாயின.

குப்பு கவுண்டர் தனது கலியாணம் சிறப்பாய் நடக்கவேண்டுமென்று மிகுந்த ஆடம்பரமான முறையில் கலியாண காரியங்களை நடத்திக்கொண்டு வந்தான். விடிந்தால் முகூர்த்தம். ஆறுமுகம் சோர்ந்து திண்ணையில் உட்கார்ந்திருந்தான். விளக்கு வைக்கும் நேரம் அண்ணா என்ற குரல் அவனைத் தட்டி எழுப்பிற்று. "அண்ணா! அஞ்சலை உங்களை வழக்கமாகச் சந்திக்கும் மாமரத்தண்டை வரச்சொல்லீற்று" என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டான் ஒரு பையன். எதற்கு வரச்சொன்னாள்? சென்று பார்ப்போம் எனச்சென்றான். அஞ்சலை தன்னைச் சூழ்ந்திருந்த பெண்கள் விலகும் சமயம் பின் பக்கமாகச் சென்று மாமரத்தண்டை சென்றாள். ஆறுமுகம் வருவதைக் கண்ட அஞ்சலை அத்தான் எனக் கூவிக்கொண்டே காலடியில் வீழ்ந்தாள் "அஞ்சலை என்னை மறந்துவிடு" என்றான், "அத்தான் அன்றுபட்ட தங்கள் கரம் தவிர வேறு யார் கரமும் என்மீது படவிடமாட்டேன் இது சத்தியம் அன்று சொன்னபடி இன்று இரவு எனது பிணத்தை இதே இடத்தில் காண்பீர்கள்" என்றாள். ஆறுமுகம் என்ன சொல்லியும் அஞ்சலை கேட்கவில்லை. "அப்படியானால் நானும் இன்றிரவு இங்கு வருகிறேன். நாம் இருவரும் சேர்ந்தே உயிர் விடுவோம். அவர்கள் நகைகளையெல்லாம் கழட்டி வைத்துவிட்டு வந்துவிடு" என்றான். சரியென சம்மதித்து இருவரும் சத்தியம் செய்துகொண்ட பின்னர் பிரிந்தனர். இதையெல்லாம் செடி மறைவில் இருந்த உருவம் கவனித்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

தாம் வெளிக்குச் சென்ற இடத்தில் பேச்சுக் குரல்கேட்க, அதைப் பூராவும் கேட்டதை நன்கு சிந்தித்து நம்மால் அல்லவோ இரண்டு உயிர்கள் மடியப்போகின்றன. [illegible]கோ வயதாகி

விட்டது. அவர்களிருவருக்குமே கல்யாணம் செய்துவிட்டு மீதி நாட்களைக் கடவுள் வழிபாட்டில் ஈடுபடுத்துவது என்ற முடிவுக்கு வந்துவிட்டான் குப்புகவுண்டன். பெண் அழைப்பு முடிந்து விருந்துண்டு யாவரும் படுக்கச்சென்றனர். மணமகளின் அறையைக் கவனித்துவந்த கவுண்டர் மணமகள் வெளிவந்தவுடன் தன் நம்பிக்கையான ஆட்கள் இருவருடன் பின்தொடர்ந்தார். குறிப்பிட்ட இடம் வந்ததும் ஆறுமுகமும் அஞ்சலையும் ஈசனை வணங்கி மறுபிறப்பிலாவது தங்களை ஒன்றுசேர்க்க வேண்டிக்கொண்டு கை கோத்துக்கொண்டு ஆற்றுப்பக்கம் சென்றனர். அதுசமயம் நில்எனச் சத்தம் வரவே திரும்பினர். எதிரில் குப்பு கவுண்டரைக் கண்டவுடன் தேகம் வியர்த்தது. கவுண்டர் அவர்கள் வாய்மூலமாக எல்லாவற்றையும் கேட்டார் "குழந்தைகளே! உங்கள் உறுதியை மெச்சுகிறேன் எனக்கும் புத்தி தெளிந்துவிட்டது. இம்மாதிரியான பாவ காரியத்தில் இறங்கவேண்டாம்" எனப் புத்தி கூறி அழைத்துவந்து விவாகத்தை முடித்துவைத்தார் குப்புகவுண்டர். தம்பதிகள் தாங்கள் ஒன்றுசேர்ந்ததைப்பற்றி ஆனந்தித்துத் தங்களை மறந்து இன்பத்திலீடுபட்டனர்.

சேலம் ஜில்லா, இடப்பாடி, 'ஞான இன்பவெளி' ஆசிரியர்
உயர்திரு. அருளார், முனிவர், கலைஞர், ஞானியார் சமரசர், குருமணி,

## கோ. வை. சின்ன ஆறுமுக சுவாமிகள்

தமது இல்லத்தில் 61 ஆண்டு நிறைவில்
துன்முகி பங்குனிமீ 1-ந் தேதி வியாழக்கிழமை காலை 6 மணிக்கு
தமது பூதஉடல் நீந்து புகழ் உடம்பு அடைந்தார்.
(இறைவன் திருவடி எய்தினர்)

ஜெனனம் : 20-9-1896
கைவல்யம் : 14-3-1957

சேலம் ஜில்லா இடப்பாடி உயர்திரு. கோ. வை. சின்ன ஆறுமுக சுவாமிகள் பங்குனி மாதம் 1-ந் தேதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு கைவல்யம் அடைந்தார். சுவாமிகள் தமிழ்க்கலைஞர், ஞானியார், குருமணி ஆவர். இவர் 6 வருடம் பிராணயாமம் செய்தார்கள். 12 வருட காலம் சிவராஜ யோக பிரம்ம நிஷ்டை செய்தார்கள். சகஜ சமாதியென்னும் சொரூபஞான நிஷ்டை 4 ஆண்டுகள் செய்தார்கள். சுவாமிகள் இல்லத்திலேயே தங்கி நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு ஞான ஒளி காட்டிவந்தார்கள். சுவாமிகள் 'ஞான இன்பவெளி' என்ற ஓர் அரிய நூலையும் 'ஞானனந்த விளக்கம்' என்ற வினவிடை நூலும் அருளிச் செய்துள்ளார்கள். சுவாமிகளுக்கு 5 புதல்வர்களும், 2 புதல்விகளும் உள்ளார்கள். அவர்களுக்கு பருவதராஜ குல மக்களின் ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

# திருக்குறள்

வித்வான் K. N.

---

## விருந்தோம்பல்

### 9-ம் அதிகாரம்

விருந்து என்னும் சொல்லுக்குப் புதுமை என்பது பொருள். இது ஆகுபெயராய்ப் புதுமைபாக வருபவர்களை உணர்த்திற்று. முன்பு அறிமுகமாகிவந்த அதிதிகளும் அறிமுகமின்றிவந்த அதிதிகளுமாகிய இருவகை விருந்தினர்களையும் உபசரித்தல். இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறம் தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்கிற ஐவையோரை உபசரித்தல். தென்புலத்தார் தெய்வம் இரண்டும் கண்ணுற் காணப்படாத வரை நினைத்துச்செய்யப்படுவனவாதலாலும், சுற்றத்தார், தான் இரண்டும் பிறருக்குக் கொடுத்தல் அல்லாமையாலும் இடையிலுள்ள 'விருந்தோம்பல்' சிறப்புடையதாகி இல்லறங்களுக்கு முதலாயிற்று. வேறுபாடில்லாத கணவனும் மனையாளும் கூடியல்லது இது செய்யக்கூடாமையால் இஃது அன்புடைமையின் பின்வைக்கப்பட்டது.

திருவள்ளுவர்

1. மனைவியோடும் காட்டினிடத்தே செல்லாமல் வீட்டினிடத்தே இருந்து பொருள்களைக் காப்பாற்றி வாழும் செய்கையெல்லாம் விருந்தினரை உபசரித்து அவர்களுக்கு உபகாரத்தைச் செய்தற் பொருட்டாம்.

எனவே, உபகாரம் செய்யாதவிடத்தே வீட்டில் இருத்தலாலும் பொருள்களைக் காப்பாற்றலாலும் உண்டாகிற துன்பச் செயல்களுக்கெல்லாம் பயனில்லை என்பதாம்.

2. தான் உண்ணப்படும் பொருள் சாவாமைக்குக் காரணமாகிய அமிர்தமேயானாலும் தன்னை நோக்கிவந்த விருந்தினர் தன் வீட்டின் புறத்திருக்க, தானே அதனை உண்ணுதல் விரும்பப்படும் முறைமையை உடையதன்றாம்.

"தன்னை நோக்கிவந்த விருந்தினர் வீட்டின் புறத்திருக்க அவரோடு உண்ணுபல், ஒருமுறை தானே ஒன்றை உண்ணுதலைச் சாவாமருந்து (அமிர்தம்) என்று தாபிப்பார் இருப்பாராயினும் அவ்வாறு உண்ணுதலை நீக்குக" என்று பொருள் கொள்ளினும் அமையும்.

3. தன்னை நோக்கிவந்த விருந்தை நாள்தோறும் உபசரித்து வருபவனது இல்வாழ்க்கையானது வறுமையால் வருந்திக் கெடுத லில்லை.

தினந்தோறும் விருந்தை உபசரிப்பவனுக்கு அதனாலே பொருள் குறையாமல் மேலும் மேலும் வளரும் என்பதாம்.

4. முகம் இனியனாய் ஞானத்தினாலும் ஆசாரத்தினாலும் உயர்ந்த விருந்தினர்களைக் காப்பவனது வீட்டினிடத்தே திருமா தானவள் தன் செல்வம் நல்வழிப்படுதலால் மனம் மகிழ்ந்து வாழ்ந்து கொண்டிருப்பாள்.

5. முன்னே விருந்தினர்களை உண்ணச்செய்து மிகுதியைப் பின்னால் உண்பவனது விளை நிலத்துக்கு விதைவிதைத்தலும் வேண்டியதில்லை.

அந்நிலம் தானே விளையும் என்பது பெறப்படுகிறது.

6. தன்னிடத்து வந்த வருந்தினர்களை உபசரித்து, பின்னால் வரும் விருந்தினர்களை எதிர்நோக்கி, தான் அவர்களோடு உண்ண இருப்பவன் வானிலுள்ளவர்க்கு நல்ல விருந்தாளியாவான்.

இதனால் மறுமையில் அவன் அடையும் பயன் கூறப்பட்டது.

7. விருந்தினரை உபசரித்தலாகிய வேள்வியினது பயன் இன்ன அளவினதென்பதாகிய ஓர் அளவினையுடையதன்று அவ் விருந்தினரது தகுதி அளவே அதற்கு அளவாம்.

தேவயாகம், பிதிர்யாகம், மனிதயாகம், பூதயாகம், பிரம யாகம் என்கிற ஐம்பெரு வேள்வியில் விருந்தோம்பல் மனித யாகத்தில் அடங்கும். நாம் தரும் விருந்தின் அளவு சிறிதாயினும் அதனை ஏற்றுக்கொள்பவர் மிக்க தகுதிவாய்ந்தவராயின் அவர் தகுதியின் அளவு பயன் மிகுதியாகும் என்பது இதனால் பெறப் படுகிறது.

8. நிலையில்லாத பொருளைக்கொண்டு விருந்தினரை உப சரித்து அவ்வேள்விப் பயனை அடையும் அறிவில்லாதவர்கள், அப் பொருளை வருந்திக்காத்து பின்பு அதனை இழந்து இப்போது எவ்விதப் பற்றுக்கோடும் இல்லாமல் ஆகிவிட்டோம் என்று இரங்குவர்.

9. பொருளுடையவராக இருக்கும் காலத்தில் வறுமை யாவது விருந்தினர்களை உபசரித்தலை இகழும்படியான அறிவில் லாமையேயாகும்; அது அறிந்தோரிடத்து இராது; அறிவில்லாதவ ரிடத்தே உள்ளதாம்.

அதாவது பொருளாலே அடையும் பயனைக்கொள்ளாமல் இழந்து வறுமையுடையவர் போலிருத்தல். அறிவில்லாமல் விருந் தோம்பலை இகழ்ந்தால் பொருளிலிருந்தாலும் அதனால் பயனில்லை என்பதாம்.

10. அனிச்சப் பூவானது பிறர் மோந்த விடத்தே வாடி விடும்; விருந்தினரை முகம் வேறுபட்டுப் பார்த்தாலே அவர்கள் வாடுவர்.

விருந்தினர்களை தூரத்திற்கண்டவிடத்து இனிய முகமும், அதுகண்டு அருகில் நெருங்கியபோது இன்சொல்லும், பின் அவர்களை நன்கு உபசரித்தலும் என விருந்தோம்புவார்க்கு மிகவும் வேண்டியதான குணங்கள் மூன்று; அம் மூன்றுனுள் முதலாவதாகிய இனியமுகத்தைக் காணுவிடத்து தூரத்திலேயே அவர்கள் வாடி நீங்கி விடுவர் ஆதலின் தீண்டியபோது வாடும் அனிச்சப் பூவினும் விருந்தினர் மெல்லியர் என்பதாம்.

---

## அவள்

"தென் குமரன்"

அவளுடைய கணவன் எங்கோ வெளியூர்க்குப்போய் இருக்கிருன், பொருள் சேர்த்துவரும் எண்ணத்தோடு. இங்கே இவள் எப்பொழுதும் கண்விழித்துக்கொண்டே இருக்கிருள்; கண் இமைக்கவும் நினைவில்லாது இருக்கிருள்! ஊர் வாயோ உளறுகிறது. 'பாவம் அவள் கணவன்பிரிவால் வாடுகிருள்; உறக்கம் பிடிக்காமல் தனிமையில் வாடுகிருள்!' என்று. அவளோ ஊரின் அறியாமைக்கு வருந்துகிருள்!

'பாவம், இந்த ஊரார்க்கு ஒன்றுமே தெரியவில்லை! உறக்கம் பிடிக்காது விழித்துக்கொண்டே இருக்கிறேனும் நான்! ஐயோ விதியே! இந்த ஊருக்கு ஏன்தான் இப்படிப் புத்தி போகிறதோ! உறங்கினுல், கண் இமைத்தால், என் கண்ணுள்ளே இருக்கும் கண்ணுளரின் உருவம் எங்கே மறைந்துவிடப் போகிறதோ என்றெண்ணி, சதா நான் உறங்காது, கண்ணிமைக்காது இருக்கிறேன்! ஆனுல் இந்த ஊரோ, வாய்க்கு வந்தவாறு உளறுகிறது. இந்த ஊரின் அறியாமைக்கு நான் வருத்தப்படுவது போக, இது எனக்கு வருத்தம் தெரிவிக்கிறது! விந்தையான ஊர் விநோதமான மக்கள்!'

இப்படி அவள் தன் ஊரையும் ஊராரையும் பற்றி எண்ணுகிருள்!

இப்படிப்பட்ட அவளுக்கு ஒரு நாள் தும்மல் வருவதுபோல, வந்து நின்றுவிடுகிறது! உள்ளம் துடிக்கும் அவள் இப்படி எண்ணுகிருள்:

'அத்தான்! என்றைக்கு வருவீர்கள் நீங்கள்? அன்போடு பழகி, ஆசையோடு அணைத்துத் தந்த இன்பத்தை எத்தனை நாள்

நான் துறந்து வாழ்வேன் ? கண்ணுளா! என் எண்ணமெல்லாம் நீங்களாய்விட்ட எனக்கு உங்களைப் பிரிந்து—எழிலுருவத்தை—ஆசைப்பேச்சுக்களைத் துறந்து இருக்க முடியவில்லையே. என்னுயிரே! என் நினைவாவது உங்களுக்கு இருக்கிறதா அத்தான் ?

இப்படி அந்தப் பூங்கொடி எண்ணிக்கொண்டிருக்கும் வேளையில் அவளுக்கு மீண்டும் தும்மல் வந்துவிடுகிறது! ஆனுல் தும்மத்தான் முடியவில்லை! சினைப்பதுபோல், தோன்றி மறைந்துவிடுகிறது! பேதைப் பெண், கணவனைப்பற்றித் தவருக எண்ணுகிருள்!

இன்பமே! என் நினைவு உங்களுக்கில்லையா? உங்கள் சிந்தையிலே இந்தச் சிங்காரியைச் சுமந்து செல்வதாகச் சொன்னீர்களே! எல்லாம் வீணுக்குத்தான? என்னரசே! எல்லாம் வீணுக்குத்தான ?

'அத்தான்! அங்கே நிலா முற்றத்திலே அமர்ந்துகொண்டு என்னை நினைப்பதுபோல் எண்ணி, நினைக்காமல் இருக்கிறீரோ? வானத்து ஈரநிலா உங்கள் இதயத்து வேதனையை அதிகப்படுத்தவில்லையா—இங்கே என்னை வாட்டுவதைப் போல!'

இப்படி எல்லாம் தன் கணவனைப்பற்றி நினைக்கும் அந்தப் பாவையின் உள்ளத்தைப் படம்பிடித்துக் காட்டுகிருர் நம் வள்ளுவர் தந்தை இந்தக் குறளில் :

"நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்."

அவளுக்குச் சேதியொன்று வருறகிது ஒருநாள்! அந்தச் சேதி வேறு யாரிடம் இருந்தோ அல்ல, அவள் கணவனிடம் இருந்துதான் வருகிறது!

'நாளை என் நாதன் வந்திடுவார்! இன்பம் கண்டிடுவேன்! இத்தனை நாள் பட்ட துன்பம் விளம்பிடுவேன்; அதற்கு என்னையவர்......ம்ம்...வரட்டும் அவர்! முதலில் அவருடன் பேசப்போவதில்லை; அவர் பேச்சைக் கேட்கப்போவதில்லை.'

இப்படி அவள் எண்ணித் தன் இதயத்தை இரும்பாக்கிக்கொள்ளுகிருள்!

மறுநாள் அவன் வந்துவிடுகிருன்! அவளின் உறுதி உருத்தெரியாமல் போகிறது! அவன் பேசுவதற்குமுன் அவளே பேசுகிருள்; அவன் செய்கைக்கு அடிமையாகிருள்! பின்னர்த் தன் நிலைபற்றி எண்ணுமவள்,

'எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து'

என்று கூறுகிருள் தன்னைப்பற்றி. விநோதமான பெண் **அவள்!**

# உழைப்பு

**திரு. ச. நடராசன்—வெம்பா கீரபாளையம்.**

மனிதர்கள் மற்ற உயிரினங்களைப்போல் பசி, குளிர், தாகம் இன்னோரன்ன இயற்கை நியதிகட்குக் கட்டுப்பட்டுள்ளனர். உணவு, உடை, உறையுள் இவை இன்றியமையாதன. 'பறவை பறக்கப் பிறந்ததைப்போன்று மனிதன் உழைக்கப் பிறந்தான்' என்று ஓர் பிரஞ்சுப்பழமொழி கூறுகிறது. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஊண், உடை, இருப்பிடம் இவைகளைப் பெற வேலை செய்ய வேண்டும். முள், புதர் நிறைந்த தரிசு நிலத்தைப் பண்படுத்தி உணவுப் பொருட்கள் விளைவித்த நம் மூதாதயர், காடு வெட்டி, கழனி திருத்தி, நாடு கண்டு, வீடுகள் கட்டி வாழக் கற்றுக்கொடுத்த அப் பண்டை மக்கள் எவ்வாறு இடைவிடாது விடா முயற்சியுடன் உழைத்திருக்க வேண்டுமென்பதைச் சிந்தித்தல் வேண்டும்.

இன்று விஞ்ஞானம் உலகை ஆட்டுகின்ற தென்றால் மிகையாகாது. விஞ்ஞானத்தைக் கண்டு பிடித்தது மனித உழைப்பு. லூபி பாஸ்டர் என்னும் கிருமி உலகங் கண்ட பிரஞ்சுதேச விஞ்ஞானி சொல்லுகிறார் "ஒரு மணி நேரம் ஒன்றுஞ் செய்யாது வீண் பொழுது போக்கி விட்டால், ஏதோ மனித சமுதாயத்திற்குப் பெருந் தீங்கிழைத்து விட்டதாக என் மனம் என்னை வருத்துகிறது" என்று அவர் காலத்தைப் பொன்னெனக்கருதி கருமம் புரிவதிற் கண்ணுங் கருத்துமா யிருந்திராவிட்டால், காலரா என்னும் தொத்து நோய்களுக்கிரையாகி மடிந்துகொண்டிருப்பர் கணக்கற்ற கோடி மக்கள். நாய்க்கடி மருந்து, தொத்துநோய்களுக்கு மாற்று மருந்து முதலியவைகளை லூயி பாஸ்டர் கண்டு பிடித்தார். சாவின் கரத்திலிருந்து காப்பாற்றப்படுகின்றனர் இன்று எண்ணிறந்த மக்கள்.

"உலகமே ஒரு பிரம்மாண்டமான அலுவலகம். ஆங்கு வலை பின்னி வாழும் சிலந்திமுதல் மாளிகைகள் எழுப்பியும், கவிகள் புனைந்தும் வாழும் மனிதன்வரை எல்லோரும் உழைக்கின்றனர்." என்று மற்றொரு பிரஞ்சுப் பழமொழி கூறுகிறது. ஆம். இக் கூற்று உண்மையே.

இதோ! வாயில் சிறு வைக்கோலும், பனை நாறும் எடுத்துச் செல்லுகிறதே பறவை, இனிப் பிறக்கப்போகும் குஞ்சுகளைப் பாதுகாக்கக் கூடுகட்டுகிறது. வெயிலில் பாரமேற்றிய வண்டியை யிழுத்துச் செல்லும் இவ் எருதுகள் மனிதனைவிட மிகுதியும் உழைக்கின்றன.

சாரை சாரையாக ஊர்ந்து செல்லும் இவ்வெறும்புகள் மாரிக் காலத்துக்கு வேண்டிய உணவைக் கோடைக்காலத்திற் சேகரிக்கின்றன. அயராது பாடுபடும் பாட்டாளியை எறும்புக்கு ஒப்பிடுவதுண்டு. மலர்கள்தோறும் சென்று தேன் சேகரிக்கும் வண்டுகள், தேனீக்கள் உழைப்பாளிகள். பகுத்தறிவில்லா விலங்கினங்களே உழைக்கும்போது, ஆறறிவு படைத்த மனிதன் ஏன் உழைக்

கக்கூடாது? பிறர் உழைப்பில் உடலை வளர்ப்பவன் திருடன்; நன்றி மறந்தவன்; அவன் சமுதாயத்திற்குச் சுமையே; மரத்தின் சத்தை உறுஞ்சி வாழும் புல்லுருவிக்குச் சமானமானவன்.

அழுக்கு மூட்டையைச் சுமக்கும் கழுதை சோம்பேரியைக் காட்டிலும் சிறந்த பிறவி.

மனிதன் கூட்டுறவாக வாழக் கடவுளால் படைக்கப்பட்டுள்ளான். பிறர் உதவியில்லாமல் எவரும் வாழமுடியாது. நிலத்தை உழுது உணவுப் பொருட்களை விளைவிக்க உழவரும், துணி நெய்யச் சேணியரும், ஆடைகள் வெளுப்போரும், சிகை திருத்துவோரும் மீன்பிடிப்பவரும், மட்பாண்டஞ் செய்பவரும் எல்லோரும் தேவையானவர்களே. எவரும் தன் சுயதேவைகளைத்தானே செய்துகொள்ள முடியாது. சிலர் தொழிலில் ஏற்றத் தாழ்வு பாராட்டுகின்றனர். தொழிலில் இழிவான தொன்றுமில்லை. ஆனால், மனிதனில் இழிவானவன் அதாவது தாழ்மையானவன் உண்டு. எத்தொழிலையும் ஏளனஞ் செய்யக்கூடாது. மீன் பிடிக்கும் தொழில் பாவமென்றும், வலைஞர்கள் ஏனைய சமூகத்தினரைக் காட்டிலும் தாழ்ந்த சாதிக்காரர்களென்றும் கருதிய காலமுமுண்டு. இன்று அரசாங்கம் அத்தொழில் நாட்டின் முதுகெலும்பெனக் கண்டு வளர்க்க ஆவன செய்துவருகிறது. அத்தொழிலில் ஊதியம் அதிகமடையச் செய்யவும் பாடுபடுகிறது. உடலுரமுடையவர்கள் உழைக்கவேண்டும். இது மனிதனுக்குப் பெருங்கடமையாகும்.

உழைப்பில் உடலுழைப்பு, அறிவுழைப்பு என இருவகை உண்டு.

அறிவுழைப்பு உடலுழைப்பைக்காட்டிலும் சுலபமானதாகவும் சிறந்ததாகவுந் தோன்றும். உடலுழைப்பாளிகள் பாடுபடாவிட்டால் அறிவால் உழைப்பவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் ஏது? இருசாராரும் இன்றியமையாதவர்களே.

"நீ உன் இரண்டு ரொட்டிகளை நெற்றி வியர்வையில் சம்பாதிப்பாயாக" என்று இயேசு கிறிஸ்து கூறியிருப்பதை நோக்க வேண்டும். அதாவது கஷ்டப்பட்டு உன் உணவை நீ சம்பாதி. இது உடலுழைப்புக்குப் பெருமை தருவதற்கென்றே சொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

உழைக்கும் மனிதன் வியாதிகளுக்கு இரையாகமாட்டான்.

சமுதாயத்தில் உழைப்பினாலன்றோ தனி மனிதன் உயர்வடைகிறான். உழைப்பாளியை மனிதசமுதாயம் வரவேற்கிறது, வாழ்த்துகிறது.

உழைப்பு மனத் திட்பத்தையும், சுறுசுறுப்பையும் அளிக்கிறது. உழைப்பாளி சோர்வடையாமல் கஷ்டங்களைப் போரிட்டு வெற்றிகாண்கிறான்.

'சோம்பேரித்தனம் சகல துர்க்குணங்களின் தாய்' என்கிறது மற்றொரு பிரஞ்சுப் பழமொழி. சோம்பேறி காலம் போக்கவும், தன் சுய தேவைகளைப் பூர்த்திசெய்யவும், திருடவும், சூதாடவும், மது அருந்தவும் பழகுகிறான்,

உழைப்பாளி அவைகளைப்பற்றி நினைக்க நேரமேது. அவன் கவனத்தோடு கடமையாற்றி எப்போதும் மனத்திருப்தியடைவான். நமக்கு இட்டவேலையை நல்ல மனத்துடன் சிரமத்தைக் கருதாது செய்யக் கடமைப்பட்டுள்ளோம். இதனாலன்றோ நம் நாட்டுப் பெரியார் ஒருவர் 'கருமம் புரிவதிலே கடுந்தவம் வேண்டுமடா' என்றுகூறிப் போந்தார் போலும்.

ஒரு சமூகம், ஒரு நாடு முன்னேறவேண்டுமாயின், மக்களனைவரும் உழைக்க வேண்டும். சோம்பலை விரட்டியடிக்க வேண்டும். தன்னை உயர்நிலைக்குக் கொண்டுசெல்வதும், கீழ்நிலைக்குக் கொண்டுசெல்லுவதும் மனிதனே. நம் நாட்டில் பன்னெடுங் காலமாக வழங்கும் உழைப்பைப் பற்றிய ஏனைய முது மொழிகளாவன :

'மிக்க உழைத்துண்ணுதான் சோறுகக்கித் தின்னும் நாயோடொக்கும்.' 'ஒரு தொழிலும் இல்லாதான் முகடியாகும்' 'ஒன்றுக்கும் உதவாதான் சோம்பனாகும்.' 'துலக்காத பாத்திரம் துருப் பிடிப்பதைப் போல், உழைக்காதுண்டு கொழுத்து உலவித் திரியும் உலுத்தர் உடல் ஒன்றுக்குமுதவாது எப்பொழுதும் நோய்களுக்கிரையாவர்'

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்னும் பாரதியாரின் பாடல் இங்கு நினைவு கூறற்பாலது.

கீழ்த்திசை நாடுகளிலொன்றான ஜப்பான் இன்று தொழில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் ஒன்றாகும். அங்கு மக்களனைவரும் பாடுபடுகின்றனர். கைத்தொழில் போற்றி வளர்க்கப்படுகிறது. மாணவர்கட்கு பள்ளியில் தொழிற்கல்வி போதிக்கப்படுகிறது. பட்டம் பெற்று பள்ளியைவிட்டு வெளியேறியதும், அவன் அரசாங்கப் பணிமனைகளில் அலுவல் பார்க்கவேண்டுமென்பதில்லை. தான் கற்ற அந்தத் தொழில்மூலமே தன் ஜீவனத்திற்கு வழிதேடிக் கொள்ளுகிறான்.

மேலை நாடுகளில் பெண்களும் ஆண்களோடு சரிநிகர் சமானமாக உழைக்கின்றனர். அவர்கள் குடும்பம் வறுமையென்னும் சூறுவெளியில் சிக்காமல் சுபீட்சமாக நடைபெறுகிறது.

இப்பொழுது ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் தொழிலை வளர்க்க அரசாங்கம் ஆக்கவேலையி லீடுபட்டிருக்கிறது. வெற்றியடைந்தால், நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும் ; தொழில் வளரும் ; மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும் ;

வறுமைப் பேயும் விரட்டப்படும். நாமும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து, சுபிட்சமுண்டாக்கப் பாடுபடவேண்டும். இதுவும் நம் கடமைகளில் ஒன்றாகும். அப்பொழுதுதான் உழைப்பின் உண்மையான தத்துவத்தை உணரமுடியும். உண்மையான உழைப்பாளிகள் தாம் உலகைப் படைக்கும் கடவுள் என்று கருதப்படும் காலமிது. பிரான்ஸ் நாட்டில் புதுமைக் கருத்துக்களைப் பரப்பிய வால்டேர் என்னும் புலவர் உழைப்பைப்பற்றிக் கூறும் முதுமொழியை நினைவிற்கொண்டு இக்கட்டுரையை இத்துடன் நிறுத்துவோம்.

"உழைப்பு நம்மிடமிருந்து எரிச்சலையும், துர்க்குணங்களையும் போக்குகிறது."

---

## பிரஞ்சில் லெயோன்புர்ழுவா

"உச்சி வெயில். ஆகஸ்ட்மாதம் கொடிய வெப்பத்திலும், வரண்ட குன்றின்மேல், திராட்சைப் பயிரிடுபவர்கள் அறுவடைக்குமுன் கடைசி முறையாக நிலத்தைக் கொத்திக்கொண்டிருந்தனர். பசிய இலைகள், இலையுதிர் காலத்து துருநிறம் பிடித்து மாறியிருந்தன. செந்நிறப்பழங்கள் கருமையாகியிருந்தன. குடியானவர்கள் குன்றின் சரிவில் குனிந்து வேலைசெய்துகொண்டிருந்தனர். கூழாங்கற்களில் பட்டு, பிரதிபலிக்கும் மண்வெட்டிகளின் ஓசை செவிகளில் ஒலித்துக்கொண்டிருந்தன.

அவ்வழியே பிரயாணிகள் போய்க்கொண்டிருந்தனர். அவர்களில் வியாபாரி திராட்சைச் சாகுபடியின் அறுவடையையும், அதன் விலையையுங் கணக்கிட்டான்; கலைஞன் திராட்சைச் செடிகளின் வரிசைகளைப் பார்த்தான். அனல் காற்றில் பிரகாசிக்கும் ஒளியையும், திராட்சைப் பயிரிடும் பெண்மணிகள் அணிந்திருக்கும் வெண்மையான தொப்பிகள் இலைகளுக்கு அளிக்கும் கப்பான நிறங்களையும் கண்டான். விஞ்ஞானி நிலத்தின் தன்மையையும், செடிகளின் தனிப் பாங்கையும் பற்றி எண்ணலானான்; மற்றுஞ் சிலர் அதில் கிடைக்கப்போகும் உயர்ந்த சாராயத்தை எண்ணிப் பாடலாயினர்.

இவர்களில் எவராவது, உதிரத்தை உறிஞ்சுகின்ற வெயிலில் பாடுபடும் பாட்டாளியைப் பற்றியோ, அவர் கடின உழைப்பைப் பற்றியோ, வாழ்க்கைநிலை செம்மைப்படுத்தப்பட வேண்டியதைப் பற்றியோ நினைத்தனரா? இல்லை. எங்கு மனித உழைப்பு தென்படுகிறதோ, அங்கு நாமும் மனிதாபிமானம் உடையவர்களென்றால், அதைப்பற்றியல்லவா முதலில் எண்ணவேண்டும்?

# வைத்தியம்

## தூதுளை

**தமிழ்ப்புலவர், சிவ. முருகசிவம் அவர்கள்.**

*[75, நைனியப்பன் தெரு, சென்னை - 1.]*

உடலுக்கு நன்மை செய்யும் பல கீரைகளில் தலை சிறந்தது தூதுளைக் கீரையாகும். இது கீரையைப் போல் உதவினாலும் இதன் குணம் மருந்தைப்போல இருப்பதால் வைத்தியத்தலைப்பின்கீழ் குறிப்பிடுவது மிகப்பொருத்தமாகும்.

தமிழ்நாட்டில் இந்தக் கீரையை அறியாதவரில்லை. வருஷத்திற்கு ஒரு முறை கூட உண்ணாதவருமில்லை என்றே சொல்லிவிடலாம். இந்தக் கீரை எங்கே கிடைக்குமோ என்றும் சாப்பிட்டால் என்னசெய்யுமோ என்றும் சந்தேகப்படுவாரும் இல்லை. மற்ற கீரைகள் ஆய்ந்து கழிவுகள் தள்ள வேண்டும். இந்தத் தூதுளையின் கீரைக்கும் பூவுக்கும் காய்க்கும் பழத்திற்கும் கொடிக்கும் வேருக்கும் தனித்தனி குணமிருந்தாலும் அவ்வளவும் உடலுக்கு நன்மை செய்கிறது.

மேற்கூறிய தூதுளைக் கீரையைப் பற்றிப் பொதுவாக உண்பதற்குச் சுவையாக இருக்குமென்றும், சிறப்பாக தூதுளைக் கீரையால் காது மந்தம், காதிலே உண்டாகும் எழுச்சி, காசம், நமைச்சல், மதரோகம், அக்கினி மந்தம், திரிதோஷம், உட்குத்தல், விந்து நஷ்டம், மேலிளைப்பு ஆகிய இவைகள் போகுமென்றும், அதன் பூவிற்குத் தாதுவைப் பலப்படுத்தி விருத்தி செய்யும் சக்தி உண்டென்றும், காயினால் வாதப்பித்த கபமும் பைத்திய தோஷமும் நீங்குமென்றும், பழத்தினால் இறுகிய மார்சளியும், க்ஷயரோகம் முதலியதும் நீங்குமென்றும், கொடியும் வேரும் சுவாச முதலிய சிலேத்தும ரோகங்களை நீக்குமென்றும் அனுபவத்தில் கைகண்ட முறையாக இருக்கிறது.

இருமல் வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் இந்தக் கீரையை விடாது சாப்பிட்டுவந்தால் நல்ல குணத்தைக் காணலாம். மேலும் தாது பலக்குறைவாக இருக்கப்பட்டவர்கள் இந்தக் கீரையைச் சாப்பிட்டால் கைகண்ட பலனாக குணத்தைப் பெறலாம்.

சைவ சமயாச்சாரிகளில் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சோமாசிமாற நாயனார் தூதுளைக் கீரையைத் தினப்படி

கொண்டுவந்து கொடுக்க, அதைச் சாப்பிட்டு உடல் நலம் பெற்ற சரித்திரம் நமக்குத் தெரிந்த விஷயமாகும். மேலும் பூந்தோட்டத்திற்கடுத்த திருமாகாளம் என்ற க்ஷேத்திரத்தில் வைகாசித் திங்களில் தூதுளைக் கீரையைச் சமைத்துப் படைக்குந் திருவிழா இன்றும் நடைபெற்று வருகிறது.

இத்தகைய சிறந்த கீரையில் முள்ளிருக்கும். கொடியாக இருக்கும் இக்கீரையைத் துண்டுதுண்டாக நறுக்கி அல்லது கத்தரித்துக் கொண்டால் விரலில் முள்படாமல் ஆய்ந்துவிடலாம். இது தெரியாத இக்கால பெண்மணிகள் இதைக்கண்டதும் பயப்படுகிறார்கள். முள்ளிருக்கும் கீரையை உண்பதா? இதனை யார் ஆய்ந்து எடுப்பது என்று புருஷன் வாங்கிக்கொடுத்த கீரையைத் தள்ளிவிட்டுத் தெரியாமல் வேறு கீரையைச் சமைத்து வைத்துவிடுகிறார்கள்.

தூதுளைக் கீரையை ஆய்ந்து எடுத்து அரிந்து நெய்யிலே இலேசாகத் துவட்டி, பருப்பிட்டு, தேங்காயும் சேர்த்துக் கூட்டாகவும் பொரியலாகவும் செய்து வாரம் ஒருமுறை சாப்பிட்டுவந்தால், இந்தக் காசரோகமே தமிழ்நாட்டைவிட்டு ஓடிவிடும். ஒரு சிலர் தூதுளைக் கீரையைச் சாப்பிடுகின்றேன் என்று நன்றாகச் சத்துப் போக வதக்கிப் புளியும் மிளகாயும் சேர்த்துத் தொகையல் செய்துகொண்டு ஒரு கழற்சிக்காயளவு சாப்பிடுகிறார்கள்.

அப்படிச் சாப்பிட்டுவிட்டுக் குணம் தெரியவில்லையே என்று சொல்லுகிறார்கள். அதிகமாகத் துவட்டுவதினால் ஜீவசத்து (Vitamins) அழிந்துவிடும். அதனோடு புளி சேர்த்தாலே எல்லா குணங்களும் போய்விடும்.

அன்றியும் மிளகாய்ச் சேர்த்தாலோ அவர்களுக்கு என்ன பதில் சொல்லமுடியும்? குணத்தைக் கெடுத்துச் சத்தை அழித்துக் கேடுசெய்யும் பொருளைச் சேர்த்துச் சாப்பிட்டுவிட்டுக் குறை கூறப்பட்டவர்கள் நன்றாக சமைக்கப் பழகவேண்டும். அல்லது யாம் எழுதிய உணவுநெறி என்ற நூலையாவது வாங்கிப் படிக்க வேண்டுகின்றேன்.

சங்க இலக்கியமாகிய குறுந்தொகையில் கூறுகின்றது—ஒரு பெண் புதியதாகக் கணவன் வீட்டிற்கு வந்திருக்கிறாள். செல்வம் நிறைந்த குடும்பம். சமையலுக்கும் ஆள் இருக்கின்றது. ஆனால் தலைவன் மேலுள்ள அன்பினால் அவளே சமைக்க எண்ணி தயிரைப் பிசைந்து சற்றுப் புளிச்சுவையாக தயிர்க்குழம்பு வைக்க முயன்றாள்.

அவள் விரல்களோ காந்தல் மலரைப்போல மென்மையாக இருக்கின்றன. தயிரோ நன்றாகக் காய்ந்த பாலில் பிரை வார்த்துத் தயிர் கெட்டியாக இருக்கின்றது. அதனை விரல்கள் நோகப் பிசைய வேண்டியிருந்தது. அப்படிப் பிசைந்து அடுப்பேற்றி பாகம் செய்கின்றாள். குனிந்து நிமிர்ந்து அவசரமாக வேலைசெய்யும் போது இடுப்பிலிருந்த ஆடை நெகிழ்ந்தது. தாளிதத்தின் பக்குவ

காலம் கெடுமென்று கையைக் கழுவிக்கொள்ளாமலே நெகிழ்ந்த ஆடையை உடுத்திக்கொண்டு திரும்பிப் பார்த்தாலும் பாகம் கெடுமெனக் கருதி குழம்பையே பார்த்துத் துழவிக்கொண்டிருக்க, தாளிப்பின் புகை குவளை மலரைப் போன்ற கண்களில் பட்டு நீர் ததும்ப, அவள் துன்பம் பாராமல் சமைத்தாளென்றால் சமைய லின் பெருமை நன்கு தெரிகின்றது.

ஒரு தாளித்தலின் பெருமை இவ்வளவானால் சமைக்கும் முறையைப்பற்றி இன்பவாழ்க்கை என்னும் தலைப்பின் கீழ் விரித்தெழுதுவாம்.

தூதுளைப் பூவைக் கூட்டாகவும் லேகியத்தோடும் காயைத் தோகையலாகவும், பழத்தைத் தனித்தும் தேன்விட்டுச் சாப்பிடு வதும் கொடியையும் வேரையும் கியாழம் இட்டுச் சாப்பிடுவதும் நல்லது. இன்னும் இதுபற்றிய விபரம் அறிய விரும்பினால் அறிவிக்கப்படும்.

ஒவ்வொரு தமிழனுடைய குடும்பமும் வைத்திய குடும்பமாக வாழவேண்டுமென்று இறைவனை இறைஞ்சி இத்துடன் நிறுத்து கின்றேன்.

---

# சொல்லடி தோழி!

**திரு. வி. என். சுப்பிரமணியம்.**

இல்லை யென்று சொல்லடி தோழி! — விருப்பம்
இல்லை யென்று சொல்லடி தோழி!
முல்லை வனத்தில் ஓர்நாள்
முகம் காட்டி மறைந்தார்!
கள்ளை நிகர் எனது
கனி இதழ் மறந்தார்!
சொல்லை உன் செவியினில்
செலுத்தவும் ஏன் மறுத்தாய்?
இல்லை என்று சொல்லாது
அவரிடம் தூது செல்ல (இல்லை)

எரு விலா செடிபோல்
ஏழை நான் வாடவும்
கருத் திலா மனமுடன்
காலத்தைக் கழிப் பாரோ!
செரு வெலாம் தொலைந்திட
சித்தம் நான் இழந்தேன்
தெருவையே விழி பார்த்து
தினம் தினம் வாடவோ? (இல்லை)

# புராணத்தில் நாம்

பா. வேலுசாமி, இடைப்பாடி

பாண்டிய நாட்டிலே கீழைச் சமுத்திரக் கரையிலே உள்ள நெய்தல் நிலத்தூரிலே பரதவர்கள் கணக்கற்றவர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் கடலில் மீன் பிடித்தலையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். மீனையே அவர்கள் செல்வமாகப் போற்றினர். படகு வீடே அவர்களுக்குப் பங்களா. குடிசை வீடே அவர்களுக்குக் கோபுரம். அவர்களின் தலைவனுன பரதவ ராசன் மீனையே வரியாகப் பெற்றுக்கொண்டான்.

அன்று பரதவராசன் தன் பரிவாரங்கள் புடைசூழ மீன் வேட்டையாடுதற்காகக் கடலில் பிரவேசித்தான். பரிவாரங்களின் களியாட்டத்தைக் கேட்டு ஆனந்தத்தில் மூழ்கிப்போனுன் பரதவ ராசன். கடல் கன்னியின் கைகளாகிய அலைகள் அவர்களின் அழகுப் படகுகளை மெல்லஅசைத்துத்தள்ள, ஆனந்தமாக அரசன் கரையோரமாக மீன்பிடித்துக்கொண்டே சென்முன்.

கடலில் வீசும் அலைகளின் ஓசையோடு—பரதவர்களின் பாட்டிசையோடு ஒரு குழந்தை அழும் ஓசையும் கலந்து அக்காற்றில் வந்தது. பரதவராசன் காதைக் கூர்மையாகத் தீட்டிக்கொண்டு பரபரப்போடு ஓசைவரும் திக்கில் திரும்பினுன். உண்மையாகவே அது ஒரு பெண்குழந்தையின் அழுகுரல்தான். உடனே அரசனின் அன்னமுகத் தோணி அந்தத் திசைநோக்கிப் பறந்தோடியது.
பாண்டிய நாட்டின் அந்தக் கீழைக் கடற்கரையிலே புன்னைத் தோப்பு பூத்துச் களித்துக்கொண்டிருந்தது. தென்றலுக்குப் பஞ்சமேது அங்கே! பூக்கொட்டிக்கிடந்த ஒரு புன்னை மரத்தடியிலே பெண் குழந்தை ஒன்று அழுதுகொண்டு படுத்துக் கிடந்தது. பரதவராசன் பார்த்தான். அவனுக்கு ஏற்பட்ட ஆனந்தத்துக்கு அளவே இல்லை. அரசன் ஆசை அலைபொங்க அழுதுகொண்டிருந்த அக்குழந்தையை அன்போடு எடுத்து அணைத்துக்கொண்டு 'பிள்ளைப் பேறு இல்லையே, என்று பெரிதும் தவம்செய்துகொண்டிருந்த எனக்கு ஈசனே என் ஆசையைத் தீர்க்க இக்குழந்தையை அளித்திருக்கிறுன்' என்று ஆனந்தம் பொங்கியவனுய் அக்குழந்தையைத் தன் மனையாள் கையிற் கொடுத்தான்.

பரதவராணியார் தான் பெருது பெற்ற அப்பெண்மணியைப் பேரானந்தம் பொங்கத் தழுவிக்கொண்டு உச்சிமோந்து முத்தமிட்டு உவகைகொண்டாள். கடற்கரையில் கண்டெடுத்த அக் கண்மணியை கருத்தோடு காத்து வளர்த்தனர்.

**பலவருடங்கள் உருண்டோடின.**

பரதவர்கள் மீன்பிடிக்கும் அந்தத்துறையிலே ஒரு பெரிய சுருமீன் வந்து பரதவர்களுக்குப் பல வழிகளிலும் துன்பம் கொடுத்தது. சுரு பரதவர்களின் தோணி கிழியும்படித் தட்டிவிடும்; மீன் செல்வங்கள் குவிந்திருக்கும் படகுகளை முட்டிக் கவிழ்க்கும். இன்னபல இன்னல்களை இழைத்து அடங்காது

அட்டகாசம் செய்துகொண்டிருந்தது அந்த அசுரச் சுறுமீன். பரதவர்கள் எத்தனையோ பெரிய பெரிய சுறுமீன்களையெல்லாம் வேட்டையாடியிருக்கிறார்கள். ஆனால் அதுபோன்ற பெரிய திமிர் பிடித்த—அடங்காத அவ்வளவு பெரிய சுறுமீனை அதுவரை கண்டதே இல்லையாம். பரதவர்கள் எத்தனையோ பாடுபட்டும் அந்த அசுரச் சுறுவை அடக்க—பிடிக்க முடியவில்லை.

பரதவர்கள் அனைவரும் அரசனிடம் ஓடிவந்து முறையிட்டனர். கடல் வெட்டையில் பரதவராசனுக்கு நிகர் ஒருவருமே இல்லை. கடலில் ஒருவராலும் செய்யமுடியாத தீரச் செயல் வீரன் அரசன். பரதவராசன் அதுபோன்ற எத்தனையோ பெரிய சுறுக்களையெல்லாம் அடக்கிப் பிடித்தவன்.

பரதவராசன் அச்சுறுவை வேட்டையாட படகிலேறிக் கடலுள் நுழைந்தான். சுறுமீன் அரசனின் படகைச் சுற்றிப் பாய்ந்து படகைச் சின்னபின்னமாகச் சிதறும்படிச் செய்தது. உடனே பரதவராசன் ஒரு தோணியில் பாய்ந்துகொண்டு வலையை வீசினான். அத்தோணியையும் முட்டித்தள்ளி உடைத்துக் கவிழும் படிச் செய்துவிட்டது. உடனே அரசன் ஒரு கட்டுமரத்தின்மேல் பாய்ந்துகொண்டு வலையை வீசினான். வலையை முன்னே வீசினால் பின்னால் பாய்ந்தும் வலப்புறம் வீசினால் இடப்புறம் ஓடியும் இப்படிப்பலவாறு ஆட்டம் காட்டி அரசனை அலையவைத்தது அசுரச் சுறு. பலமுறை வலையில் மாட்டிக்கொண்டாற்போல் தோன்ற அரசன் ஆர்வத்தோடு வலையை இழுத்தால் வலையி னின்றும் வழுக்கி விழுந்தோடி அலையவைத்தது.

தன் படைகளுடன் அச்சுறுவைப் பிடித்தற்கு எடுத்துக் கொண்ட பிரயத்தனங்கள் பயனற்றனவாகப் போயின. பரதவ ராசன் மிகுந்த மனத்துயரம் கொண்டான். "இச்சுறுமீனைப் பிடித்துக்கொடுக்கும் வீரனுக்கு என்மகளை மணம்செய்து கொடுத்து எனக்குப் பின் இந்த அரசாங்கத்திற்கும் அவனையே அரசனுக்குவேன்" என்று பறையறைவிக்க ஏற்பாடுசெய்தான்.

பரதவராசகுமாரியின் அழகுக்கு ஈடாகக் கூற இந்த அவனியி லேயே ஒருவரும் இல்லையென்று அனைவரும் புகழ்ந்தனர். அவளின் அழகை வர்ணிக்க எவராலும் ஆகாது! "அந்த அழகு ராணியை அடைந்தே மீளுவேன்" என்று எத்தனையோ வீரர்கள் ஆசையோடு வீரகங்கணம் கட்டிக்கொண்டு அந்த அசுரச் சுறு வைப் பிடிக்க ஆவனவையெல்லாம் செய்தனர். முடிவில் எத்த னையோபேர் முடிவையெய்தினர்—எத்தனையோ பேர் இன்னல் களுக்காளாகி மீண்டனர். ஒருவரேனும் அச்சுறுவை அடக்கி வெற்றி கண்டாரில்லை.

சுறுவின் அட்டகாசம் அடங்காததாகியது. பரதவராசன் செய்வதறியாது பரதவித்தான்.

ஏறுநடை இளைஞன் ஒருவன் எங்கிருந்தோ வந்துகொண்

டிருந்தான். அழகரசனுகஅவன் காணப்பட்டான். அவனுடைய பார்வையிலேயே வீரமும், கருணையும் பிரதிபலித்துக்கொண்டிருந் தது. அவனழகிற்கு ஈடுசொல்ல எவரும் இல்லையென்றே கூற லாம். அந்த ஆணழகனுக்குப் பின்னுல் ஒருவன் வலையையும் மீன் பிடி கருவிகளையும் தூக்கிக்கொண்டு வந்தான்.

அவ்வீரன் பரதவராசனிடம் வந்து பணிந்து நின்று "என் பெயர் சோமசுந்தரம் என்பது. என் ஊர் மதுரையம்பதி ஆகும். நான் மதுரையில் உள்ள பரதவராசனின் குமாரன். எவராலும் அடக்கிப் பிடிக்கமுடியாத அந்த அசுரச்சுருவை அடக்கிப்பிடித்து அந்த அழகுச் சிலையை அடைந்தே தீருவேன்" என்று ஆவேசம் பொங்கியவனுய் வீரம் பொங்க அரசனிடம் கூறினுன்.

பரதவ ராசகுமாரனின் வீராவேசமான சொல் கேட்டுப் பரதவராசன் பரமானந்தம் கொண்டான். அவனுடைய தோற் றத்தைப் பார்த்தாலே அவன் எப்படியும் வெற்றிபெறுவான் என்று எண்ணும்படியாக இருந்தது. பரதவராசனும் மற்றையோ ரும் அவ்வீரனை வாழ்த்தி வேட்டையாட விடைகொடுத்தனர்.

வீரன் கட்டுமரத்திலேறி தன்னந்தனியாகக் கரையைவிட்டுக் கடலுள் நுழைந்தான். அனைவரையும் ஆட்டிவைத்து அடங்காது அலைந்து திரிந்த அந்த அசுரச் சுரு அவ்வீரனைக் கண்டதும் அஞ்சி யொளித்தது. சோமசுந்தரம் வீசிய அந்த வலையில் சுருமீன் மாட்டிக்கொண்டது. பரதவ ராசகுமாரன் வலையைச் சுருக்கிச் சுருமீனை இழுத்துக் கரையில் போட்டான். வீரனின் வெற்றிகண்ட பரதவரனைவரும், மனத்தில் எழுந்த ஆனந்தக் கடலின் ஆச்சரிய அலைபொங்க ஆரவாரம் செய்தனர். அவனை அப்படியே கட்டிப் பிடித்துத் தூக்கிக்கொண்டு அகமகிழ்ச்சி பொங்க ஆனந்தப் பண்பாடினர்.

பரதவராசன் பரமானந்தக் கடலில் மூழ்கிக் களித்தான். பரதவ ராசகுமாரி, "நான் செய்த பாக்கியத்தால்தான் இந்தப் பெருவீரனையே அடைய முடிந்தது" என்று அவனை எண்ணி யெண்ணி இன்பக்கடலில் மூழ்கினுள்.

இருவருக்கும் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தது.

திருமணக்கோலம் பூண்ட பரதவராசனின் மகள் உமாதேவி யாகியும்—சுருமீனைக் கொன்ற சோமசுந்தரன் மதுரையம்பதியில் கோவில்கொண்டெழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளாகியும் தோற்றமெடுத்து இடபவாகனத்திலமர்ந்து வானகத்தை நோக்கிப் பறந்தனர். அக்காட்சி கண்ட அனைவரும் பேரின்பப் பெருங்கட லில் மூழ்கினர்.

"அன்பனே! நீ நெடுங்காலமாக மக்கட் பேறின்றி எம்மை நோக்கிப் பெருந்தவம் செய்தது கண்டிரங்கியே நாம் உனக்கு உமாதேவியாரை மகளாகத் தந்து, பின்னர் அடக்கமுடியாத அசுரச் சுருவையும் ஆக்கிப் படைத்து, மதுரையம்பதியாளும் பரதவ ராசகுமாரனுக வந்து திருமணம் புரிந்துகொண்டோம்! நீ

இப்பூவுலகத்தில் குபேரன் போல சகல சம்பத்துக்களையும் அனுபவித்து வாழ்ந்து நம் கைலாச பதியை வந்துசேருவாயாக!'' என்று திருவருள் புரிந்து மறைந்தார்.

பேரின்பப் பெருங்கடலில் மூழ்கிக் கிடந்த பருவதராசன்.

" இரக்கமி லிழிந்த யாக்கை யெடுத்துழ லேழையேனைப்
புரக்கவின் றென்போல்வந்து புண்ணிய வடிவம்போற்றி!
அரக்கெறி பவளச்செவ்வா யணங்கினை மணந்தென் பாசங்
கரக்கவெவ் விடைமேனிற்ற கருணையே போற்றி ''

என்றான்.

[திருவிளையாடற் புராணத்திலுள்ள ஒரு கதையைத் தழுவியது.]

---

# மனநிலை

**திரு. S. P. சௌந்தரராஜன், — ஆம்பூர்.**

சௌந்தர்! சௌந்தர்! என்று கூப்பிட்டுக்கொண்டே பாஸ்கர் என் அறைக்குள் வந்தான். "என்னடா என்னடா? என்றேன். ஒன்றுமில்லை. இப்போதுதான் சாப்பிட்டேன்; தூக்கம் வரமாட்டேங்குது, கொஞ்சநேரம் உன்னோடு பேசலாம் என்று வந்தேன் என்றான் பாஸ்கர்.

சரி பேசு. என்ன விடியும் மட்டும் இல்லையே? என்று அவனைப் பார்த்தேன். நீ சீக்கிரம் என் கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டாயானால் விடியும் மட்டும் இல்லை என்றான்.

"என்னடா இது? தடபுடலாய் இருக்கிறது. எந்த சப்ஜக்டில் (Subject) கேள்வி கேட்கப் போகிறீர்கள் சார்! லாஜிக்கிலா? (Logic) இஸ்டரியிலா? (History)'' என்றேன்.

அலைகடலில் படுத்துத் தவிக்கும் ஒருவனுக்குச் சிறு துரும்பு கிடைத்து, அதைக் கைப்பற்றுங்கால் அது தவறிவிடின் அவனுடைய 'மனநிலை' எவ்வாறு இருக்கும்? என்று மூச்சுவிடாமல் அவன் கேள்வியைச் சொல்லி முடித்தான்.

"பாஸ்கர், இது கேள்வியா? புதிரா?'' என்றேன்.

" இரண்டும் சேர்ந்ததுடா இது.''

"டேய்! இங்கு பேசவந்தாயா? கேள்விகேட்க வந்தாயா?

விடைதெரியவில்லை என்று சொல்வதற்கு இது ஒரு வழியா?

பாஸ்கர், தற்சமயம் எந்த கேள்விக்கும் பதில்சொல்லும் நிலையில் இல்லை நான்!

ஏன்? மனம் வேறு எங்காவது தாவுகின்றதா?

தாவவும் இல்லை; குதிக்கவும் இல்லை. மனம் சரியாய் இல்லை.

சரி, உனக்கு விடை தெரியாது!

"பாஸ்கர், என்னோடுகூட வேலூரில் S.S.L.C. வகுப்பில் துவாரகன் என்ற நண்பன் படித்துக்கொண்டிருந்தான். அவனுடைய சொந்த ஊர் வேலூரேதான். அதே பள்ளியில் அவன் மாமன் மகள் நளினி என்பவள் நான்காம் பாரத்தில் படித்து வந்தாள். நல்ல அழகு, சிவப்புங்கூட. அநேகமாகப் பதின்மூன்று வயதுதான் அப்போது இருக்கும். துவாரகனுக்கு அந்தப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள உள்ளூர ஆசை. அதை இரண்டொருமுறை என்னிடம் கூறியிருக்கிறான்.

இவனுடைய தமக்கைக்கும், இவனுக்கு நளினியைத்தர ஆசை. அந்த வருடம் நாங்கள் S.S.L.C. யில் தேற, நளினி மங்கைப் பருவம் எய்தினாள். இதனால் அவளைப் பள்ளிக்கு அனுப்பவில்லை அவளது பெற்றோர்கள்.

நானும் அவனும் சென்னைக்கு வந்து அரசினர் கல்லூரியில் சேர்ந்து படித்தோம். இண்டர்மீடியட்டை முடித்து B.A. வுக்கு வந்தோம். இதற்குள் துவாரகனின் தாய்தந்தையர் அவனுடைய திருமணத்திற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். துவாரகன் B.A. முடிக்கவேண்டியதுதான். உடனே திருமணம்.

துவாரகன் வாயில் 'நளினி' என்ற சொல் சகஜமாக மாறி விட்டது. ஆஸ்டல் ரூம் சுவற்றில் அவன் புத்தகங்களில், கண்ட இடங்களிலெல்லாம் 'நளினி' என்ற வார்த்தையைக் காணலாம் என்னதான் ஆனந்தத்தை அந்த மூன்று எழுத்தில் கண்டானோ!

எதிர்பார்த்த பரீட்சையும் முடிந்தது. அவன் வேலூர் போய்விட்டான். நான் மட்டும் இங்கு (ஆம்பூர்) வந்தேன். அவன் சென்ற பிறகு இரண்டு கடிதம் வந்தது. முதல் கடிதத்தில் தான் சௌக்கியமாக இருப்பதாகவும், திருமணம் அடுத்தமாதம் நடக்கப் போவதாகவும் எழுதியிருந்தான். இரண்டாவது கடிதத்தில் திருமணம் தைமாதம் 22-ம் தேதி என்றும், என்னைப் பத்து நாட்கள் முந்தியே வரும்படியாகவும், நளினி இரண்டு நாட்களாக இலேசான காய்ச்சலுடன் இருப்பதாகவும் எழுதியிருந்தான். ஆனால், இன்று வந்த கடிதத்தில் நளினி பரலோகம் சென்றுவிட்டதாகவும், தன் மனக்கோட்டை யெல்லாம் பொடியாகி விட்டதையும் எழுதியிருக்கிறான்" என்றேன்.

"ஐயோ பாவம், அவன் மனம் என்ன பாடுபட்டிருக்கும்" என்றான் பாஸ்கர்.

"அலைகடலில் பட்டுத் தவிக்கும் ஒருவனுக்கு சிறு துரும்பு கிடைத்து அதைக் கைப்பற்றுங்கால் அது தவறிவிடின் என்ன பாடுபடுவானோ அதே நிலையைத்தான் என் கற்பனை துவாரகனும் அடைந்திருப்பான். போதுமா உன்கேள்விக்கு விடை."

"இவ்வளவு நேரம் நீ சொன்னது ... ... ... ...?

ஆமாம். கதையல்ல விடைதான்—நீ கேட்ட கேள்விக்கு விடையென்றேன்.

# யார் பெற்ற செல்வம்?

திரு. M. A. C. பச்சையப்பா, கும்பகோணம்.

## 8-வது சீன்

(செல்வந்தர் வீடு)

(வேலைக்காரன் டல்லு பீரோ நாற்காலிகளைத் துணியினால் துடைத்தபடி "நாட்டின் நிலவரத்தில் கலவரம் புகுந்து கலக்குது" என்ற பாட்டைப் பாடிக்கொண்டிருக்கிறான். அச்சமயம் செல்வந்தர் செங்கல்வராய பக்தர் வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவியபடி தலையை ஆட்டி, பாட்டை ரசித்துக்கொண்டிருக்கிறார். பாட்டு முடியும் சமயம் கனைத்தபடி வந்து நாற்காலியிலமர்கிறார்.)

செல்: டேய், டல்லு! இப்படிவந்து நில்லு!

டல்: (பயந்தபடியும், திகிலுடனும் கிட்டே வந்தவன்) கூப்பிட்டீங்களா எஜமான்?

செல்: ஆமாம்பா! இப்போ நாட்டின் நிலவரம் ரொம்ப கலவரந்தானா? ம்...!

டல்: (தலையைச் சொறிந்தபடி) இஹிஹி இல்லீங்க எஜமான்! சும்மா ... ...

செல்: பரவாயில்லை டல்லு. சும்மா சொல்லு!

டல்: இல்லே எஜமான் நம்ம நாட்டிலே இப்போ ஒவ்வொருவரும் ஒண்ணுமில்லாமலேயே காசு பறிக்க வழிசெய்றதைப் பார்த்தா ... ம் ... அதையேன் கேக்குறீங்க? ஒரு கொள்கையா திட்டமா? எதுவும் கிடையாதுங்க. அட, அதுதான் போகட்டுங்க! நம்ப சர்க்காரும் . . . .

செல்: உருப்படியான ஒரு திட்டத்தையும் உருவாக்காமலிருக்கிறது என்று சொல்லுகிறாய்?

டல்: அதனால்தான் எஜமான் சொல்றேன். நம் அரசாங்கத்தவர் மீது நம் மக்கள் கனல் மொழியைக் கக்கவேண்டி இருக்கிறது.

செல்: சபாஷ்டா டல்லு! கனல் மொழி! அதென்னடாப்பா கனல் மொழி?

டல்: அதாங்க! கன்னித் தமிழ் நிலத்தின் கழுத்தை நெறித்துக் கொல்லும் கயவர்களுடன் போராடும் கடும்சொற்கள்.

செல்: ஓகோ! ஐடியா அபாரண்டா? இதற்குத்தான் கனல் மொழி என்பதா?

டல்: ஆமா எஜமான்; கசடர்கள் கருத்திழந்த கபோதிகள்.

செல்: எலேய், என்னடா திட்டுறே?

டல்: இல்லிங்க எஜமான். அந்தக் கசடர்களின் கையாட்களாகக் கபோதிகளின் கைக்கூலியாக, நம் செந்தமிழ் நாட்டில் ஏராளமானபேர் இருக்கின்றார்கள் எஜமான்!

டல்: வெரிகுட்! எலே, டல்லு வெகுதூரம் போயிட்டேடா நீ.

டல்: எல்லாம் பழக்க வழக்கந்தான் எஜமான்.

செல்: ஏண்டா டல்லு இப்போ பிஸினஸ் எல்லாம் எப்படியிருக்கு? மணி மார்க்கெட் ரொம்ப டல்லாமில்ல?

டல்: ஆமாங்க. எல்லாத்தையும் விட மணி மார்க்கட்டுத் தாங்க ரொம்ப ரொம்ப டல்லு.

செல்: நல்லாருக்குடா போக்கிரிப்பயலாயிருக்கிறுயே?

டல்: எல்லாத்துக்கும் பிள்ளையாரிருக்காருங்க.

செல்: எலே டல்லு. முன்னொரு தடவை பிள்ளையாரெல்லாம் மூலைக்கு மூலை பட்ட அவஸ்தையைப் பார்த்திருக்கியாடா?

டல்: அப்படி ஆனதினுல்தான் எஜமான் நம்ப ஆத்தங்கரை ஓரமா பூமிக்குள்ளேயிருந்து என்னை எடுத்துப் பூஜை பண்ணுங்கடான்னு கனவிலே வந்து சொன்னதும் பிரமாதப் படுத்தி மறுநாள் காலையிலே சும்மா கிடந்த இடத்திலே ஒரு கோயிலே உண்டாயிடிச்சி எஜமான்.

செல்: நீ சொல்லுவாயே விடிவெள்ளிப் பிள்ளையாருன்னு அதுதானு பூமிக்குள்ளிருந்து புறப்பட்ட பிள்ளையார்?

டல்: ஆமாங்க. நான் வேணும்னு கூட்டிக்கிட்டுப்போறேன்; என்னோடே வாங்க!

செல்: ஏண்டாப்பா, எனக்குப் போகப் பாதை தெரியாதுன்னு?

டல்: தெரியாமெ என்னங்க? எப்படிப்போனுலும் ஆற்றைத் தாண்டித்தாங்க போகணும். ஒரு சின்னக் குழந்தையைக் கேளுங்க அதுகூட அக்கரையிலேதானிருக்குன்னு சொல்லுங்க!

செல்: ஆமாமா, அசந்து தூங்கற அருணைசலம் பிள்ளை சாவடியும் அங்கே தானிருக்குன்னு எல்லாருக்கும் தெரியுமடா.

டல்: அய்யய்யோ! தப்பு எஜமான் தப்பு! நான் விடிவெள்ளிப் பிள்ளையார் கோவில் இருப்பதைச் சொன்னு நீங்க சாவடியைப்பத்தி சொல்றீங்க!

செல்: சரி சரி போடா. போய் நம் பருவதாவைக் கூட்டி வா. பள்ளிக்கூடம் விடுகிற நேரமாச்சு.

டல்: நடந்து போகட்டுங்களா, இல்லே ... ...?

செல்: வேண்டாம் ஸார்! பறந்து போங்களேன். முட்டாப்பயலே மூளை எங்கடா போச்சி உனக்கு? போடா போயி நம்ம காரை எடுத்துகிட்டு ... ...

டல்: நீங்க என்னு எஜமான், நானுவது காரை எடுத்துக்கிட்டு போறதாவதுங்க!

செல்: (சிரித்தபடி) அட அடிமுட்டாப்பயலே! உன்னைக் காரைத் தூக்கிக்கொண்டு போகச் சொல்லலேடா! டிரைவர் பிச்சை இருப்பான். அவனைக் கூட்டிக்கிட்டுபோய் பருவதாவை அழைத்துவா.

டல் : அப்படிங்களா ? இப்பத்தாங்க புரியுது !

செல் : ஏண்டா நிக்கிறே போயேன் ?

டல் : எஜமான் டிரைவர் பிச்சைக்கிட்ட சொல்லி எனக்கு கார் ஓட்டப் பழகிக்கொடுக்கச் சொல்லுங்க எஜமான் !

செல் : ஏண்டா டல்லு. நீ கார் ஓட்டத்தானே பழகிக் கணும் ?

டல் : ஆமா எஜமான். எனக்கு ரொம்பநாளா ஆசைங்க !

செல் : இங்கே பார். உன் ஆசையைத் தீர்த்துவைக்க நம்ம ராஜா லண்டன்லே இருந்து வரட்டும். வந்ததும் ராஜாவையே விட்டு கார் ஓட்டப் பழகிக்கொடுக்கச் சொல்றேன் !

(டல்லு மனைவி நல்லு உள்ளே வருதல்.)

நல்லு : எஜமான் ! எங்கூட்டய்யாவுக்கு அது ஒன்னுதாங்க குறைச்ச. கார் ஓட்டப் பழகிக்காமே இவருக்குச் சோறே இறங் குகிறதில்லிங்க !

டல் : ச்சு சும்மாயிரு நல்லு ! ஏன் எஜமான் நம்ப தம்பி சீமைக்குப் போனதும் கடுதாசி போட்டதுங்களா ?

செல் : போட்டுக்கொண்டுதாண்டா இருக்கான். நேத்துக் கூட முன்னூறு ரூபாய் தந்தி மணியார்டர் பண்ணினேன்டா.

டல் : சரிங்க எப்படியாவது நம்ப தம்பி ராஜா படித்துப் பட்டம் பெற்று நல்லபடியா வந்து சேரணும் !

நல் : அப்படின்னு விடிவெள்ளிப் பிள்ளையாருக்கு வேண்டி யிருக்கேன்னு சொல்லேன். ஏன் சொல்லாமெ நிறுத்திட்டே ?

டல் : இந்தா மறுபடியும் ஆரம்பிக்கிறீயே சும்மாருடீன்னு முன்னியே சொன்னேனல்ல ?

செல் : நல்லு. இவனுக்கு நல்ல சாப்பாடு போடுறதினுல் தான் இப்படிப் பேச ஆரம்பிக்கிருன். நாளையிலிருந்து அரைப் படி ஆட்டுப்பாலும், வீசம்படி மணிலாக் கொட்டையும் ஆகார மாகக் கொடுத்துவை. அப்புறம் பார். இவன் சாத்மீகத் துறை யில் இறங்கிடுருனு இல்லையான்னு ?

நல் : நல்லா சொன்னீங்க எஜமான் ! மகாத்மா காந்தி யோட பேரு மறைந்தே போகுங்க.

செல் : ஏன் ? அஹிம்சையை அப்படியே கடைப்பிடித்து விடுவான்னு சொல்றீயா நல்லு ?

நல் : பின்னே இல்லீங்களா ? ரொம்ப மேலே போயிடுவாரு.

செல் : போகட்டுமே ! கருணை வள்ளல் காந்தி மகானைச் சுட ஒரு கருங்காலி கோட்சே. இந்த வேலைக்கார டல்லுப் பய லைக் கத்தியால் குத்த ஒரு தகரடப்பா பேர்வழி இல்லாமலா போய்விடுவான் ?

டல் : உயிரோட இருக்கிறவங்களைச் சுடுகிறவனும் ; தெரு வில் போய்க்கொண்டிருப்பவர்களைக் குத்துகிறவனும் ஒரு நாளும் உருப்படவே மாட்டான் எஜமான் !

நல்: காருண்யமூர்த்தி, கருணைவள்ளல் அந்தக் காந்திமகானைப் போல, அஹிம்சை, சாத்மீகம், சாந்தம், பொறுமை எல்லாம் இவருக்கு எங்கே எஜமான் ஏற்படப்போவுது. இவரு அஹிம்சை வீசை என்னவிலை என்னுல்ல கேப்பார். இவரைப்போயி அவரோடு சேர்க்குறீங்களே ?

டல்: பார்த்தீங்களா எஜமான் ரொம்ப ஓவராபேசுறதை? என்னை ரொம்ப மட்டமால்லா நினைச்சுப் பேசுரு ? சாத்மீகம், சாந்தம், பொறுமை மூன்றும் ஒன்ருகக் கூடினுல் அஹிம்சைங்றது உருவாகிவிடுகிறது. இது தெரியாமே எந்த மனுஷனுவது இச்சுதந்திர நாட்டிலிருக்கமுடியுமா எஜமான் ?

செல்: நல்லு! உன் டல்லு முன்போல் இல்லை. இப்போது கண்ட புத்தகங்களைக் கரைத்துக் குடித்துவருகிருன்.

நல்: எஜமான்! இருக்க இருக்க இவரு ரொம்ப மேலே போருருங்க. இவரை எப்படியாவது வர்ற எலக்ஷன்லே நிக்கவச்சி மந்திரியா ஆக்கிடுங்க. சம்பளமில்லாட்டிப்போனுலும் போவுது!

செல்: ஏன் ? அவன் தொந்தி நிரம்பினுப் போதும் என்கிருயா நல்லு.

நல்: இல்லீங்க எஜமான்! தந்திக்கம்பி போட்ட தம்புராவைக் கையிலெடுக்காமலிருந்தா போதும்!

செல்: பார்த்தியாடா டல்லு! நல்லோட அயிடியாவை? ம்... சரி. மணி ஐந்தடித்து ஐந்து நிமிஷங்களாகுது போ போ. போய் நம் பர்வதாவை அழைத்துவா.

டல்: இதோ போய்க் கூட்டியாரேன் எஜமான்.

### 9-வது சீன்

(அயல்நாடு சென்ற ராஜா சில மாதங்களில் அங்குப் பௌன்டன் என்ற ஆங்கிலேயனுடன் சிநேகம் கொண்டும் ஜூலா என்ற ஆங்கில மாதுடன் தொடர்பு வைத்துக்கொண்டும் சதா குடிப்பதும், டான்ஸிங் பார்ட்டியில் கலந்துகொண்டு கூத்தடிப்பதுமாய் இருத்தல்.)

### ஓர் நாள்!

(பௌண்டனும், ஜூலாவும் வீட்டிலிருக்கும் சமயம் ராஜா அங்கு வருதல்.)

பௌ: வாட் மிஸ்டர் ராஜா! குட் மார்னிங். சிட்டௌன் பிளீஸ் (கைகுலுக்குதல்.)

ஜூலா: (கால்மேல் கால்போட்டு நாற்காலியில் சாய்ந்தபடி) குட்மார்னிங் ராஜா! பன்ஸூவல் டயத்திற்கு அட்டன் டாயிட்டீங்களே? ரொம்ப தேங்க்ஸ்!

ரா: எஸ் ஜூலா! சொன்ன டயத்துக்கு வர்லேன்ன நம்ப மேனர்ஸ் என்னுகிறது? இல்லையா பௌண்டன்?

பௌ : தேங்ஸ் பிரதர். ராஜா இன்று புரோக்ராம் நம்ப ஐடியாப் போல்தானே? ம் ... இன்று க்ளோப்பிலே எக்சலன்ட் பிக்சர். ஏ ஒன் பிரதர், ஏ ஒன்! ஈவினிங் மாட்னிஷோவுக்கு அட்டன்டாகிவிட வேண்டியதுதானே?

ராஜா : (நாற்காலியிலமர்ந்தபடி) நோ நோ பிரதர்! இன்று நயிட் ஜூலாவின் டான்ஸிங் புரோக்ரும் இருக்கும்போது (ஜூலாவைப் பார்த்தல்.)

பௌ : ஓ ஐஸி! சரி மிஸ்டர். அப்போ டுமாரோ ஈவினிங் ஷோவுக்குப் போயிட்டா போவுது!

ராஜா : வெரிகுட் அயிடியா!

பௌ : ஒரு அயிடியா பிரதர்! நயிட் டான்ஸிங் புரோக்ராம் குளோஸானதும் செகண்ட் ஷோவுக்குப் போயிட்டா?

ராஜா : வெரி பைன் பிரதர்! குட் அயிடியா! வெரிகுட் அயிடியா! ம் ... பிரதர் அப்போ நைட் செகண்ட்ஷோவுக்கே திரீ டிக்கட்ஸ் பஸ்ட் கிளாசுக்கு ரிசர்வ் செய்யச் சொல்லி போன் பண்ணிடும்! ஜூலா எப்படி எங்க எஸ்டிமேட்?

ஜூலா : எக்சலெண்ட்! ஏ ஒன் ராஜா! (ராஜா ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு கிட்ட நெருங்கி கன்னத்தைத் திருப்பிவிட்டபடி)

ராஜா : ஜூலா. உன்னுடைய டான்சு ரொம்பப் பிரமாதமாய் இருக்கணும் தெரியுதா?

பௌ : ஐ ஸி! அப்படிச் சொல்லும் பிரதர். நம் ஜூலா டான்ஸ் ஆடின ...... பாரீஸ் மை லேடியெல்லாம் பம்பரம் போல் சுத்தவேண்டாமா?

(இரவு டான்ஸ் ஆடுதல், ராஜாவும் பௌண்டனும் பார்த்து ரசித்தல். டான்ஸ் முடிந்ததும் ஜூலா ராஜாவின் மேல் கையை வைத்து உலுக்கியும் உணர்வு பெறுமல் மெய்ம்மறந்து உட்கார்ந்திருக்கிருன். சற்று நேரம் கழித்து உணர்வுபெற்றுத் திரும்புகிருன்.)

ஜூலா : ராஜா என் டான்ஸ் எப்படி?

ராஜா : ஏக குஷி போ! ஆமாம் ஜூலா. தமிழ் நன்ருகப் பேசுகின்ருயே?

பௌ : (குறுக்கிட்டு) எல்லாம் உம்மைப்போலுள்ள இந்தியர்களுடன் ஸோஷியலா நடந்துகொள்வதினுல் ஏற்படும் பழக்கந்தான் பிரதர்!

ஜூலா : அதிருக்கட்டும்! என் டான்ஸ் எப்படியிருக்கு? அதை முதலில் சொல்லும்?

ராஜா : சொல்லத்தான் வேண்டுமா? சொல்கிறேன் கேள். நீ ஆடின ஆட்டம் என்னவோ என் மனதையே ஒரு ஆட்டு ஆட்டிவிட்டது போ. ஆனுல் எங்கள் நாட்டிலே இந்தமாதிரியான ஆட்டத்திற்குப் பரிசு என்ன தெரியுமா? கல்லடிதான்! உன் டான்சும் நீயும்!

பௌ : என்ன பிரதர்! பிரமாதமா புகழ்ந்து பேசுவீங் கன்னு நினைச்சேன். மதிப்பு கொடுக்காமே, மட்டந்தட்டிப் பேச ஆரம்பிச்சுட்டீங்களே. சர்தான் உங்களுக்கு இங்லீஷ் டான்சு பிடிக்காது போலிருக்கு.

ராஜா : சபாஷ் பௌண்டன்! நம்ப அயிடியாவை அறிந் தவன் நீ ஒருவன்தானப்பா இந்த நாட்டிலே. பிரதர் என்ன இருந்தாலும் இந்திய நடனக் கலைக்கே ஒரு தனி மவுசு இல்லியா?

ஜூலா : (எழுந்து நின்றபடி) போதும் உங்கள் புகழ்ச்சி. இப்படி இகழ்ச்சி செய்வீர்கள் என்று தெரிந்திருந்தால் நான் டான்ஸ் ஆடியிருக்கவே மாட்டேன்!

பௌ : ராஜா! எங்க நாட்டுக்கு ஏற்ற டான்ஸ் இதுதானே!

ராஜா : ஆமா! ஆனஸ்ட் இல்லாமே காலைத் தூக்கிக் காட்டி ஆட்டமாடுவதுதான் இந்நாட்டுப் பழக்கம்போலும்?

பௌ : எஸ் பிரதர்! எங்க நாட்டுப் பழக்கத்திற்கும் உங்க நாட்டுப் பழக்கத்திற்கும் ... ...

ராஜா : ஏணி வைத்தால்கூட எட்டாது தான்!

ஜூலா : ஏன் எட்டாது. எட்டும். கிட்டத்தானே இருக்கு?

பௌ : ஆமாமா! கிட்டத்தானே இருக்கு. ஏழாயிரம் மைலுக்குள் இல்லையா?

ரராஜா : போகட்டும். விவகாரம் இத்துடன் நிற்கட்டும். ம் ... ஜூலா இப்படி வா! (கையைப்பிடித்து இழுத்து முத்த மிடப் போதல், அதுசமயம் பௌண்டன் உள்ளே போய்விடுதல்.)

ஜூலா : (கைகளால் தடுத்து எழுந்தபடி) ஊஹூம்! அப்புறமாகட்டும். ஏன் அவசரப்படுகிறீர்கள்?

(மேசைமேலிருக்கும் சோடா புட்டியிலிருந்து பிராந்தியை கிளாஸில் ஊற்றிக்கொடுக்கிறாள். கையில் வாங்கிக் குடித்தபடியே அவள் வாயருகில் கிளாசைக் கொண்டுபோகிறான்.)

ஜூலா : ராஜா! நீங்க சாப்பிடுங்க சாப்பிடுங்க! இதோ இருக்கே (மற்றொரு கிளாசில் ஊற்றிக் குடிக்கிறாள்.)

ராஜா : ஆஹா! ஜூலா உன்னழகை அள்ளிவைக்க என் னுள்ளம் இடங்கொடுத்ததற்கு ... ...

ஜூலா : நான் தவம் செய்தவளாகத்தான் இருக்கனும்!

ராஜா : உன் வனப்பு மிகுந்த வதனத்தை வர்ணிக்க ... ...

ஜூலா : ஆசை கொண்டிருப்பீர்கள் இல்லையா? அப்படி ஆசை உங்களிடம் அதிகமிருப்பினும் காசை மதிக்கும் கன்னியல்ல இந்த ஜூலா என்பதைக் கண்டுமிருப்பீர். ஆனால் ... ...

ராஜா : என்ன ஆனால்?

ஜூலா : இல்லை, நீங்கள் இங்குள்ளவரையில் தானே பங்கு கொள்வீர். பிறகு உங்களூருக்குப் போய்விட்டால் இதுகாறும் நாமிருவரும் உறவாடி ஒன்றுபட்டு உல்லாசமாயிருந்ததை மறந்து தானே போய்விடுவீர். நான் ... ...!

ராஜா! மனமொடிந்து மீளாத் துயரில் மூழ்கி, கடலலையில் சிக்கித் தவிக்கும் துரும்பைப்போல் துயரப்படுவேனென்கிருயா ஜலா? ஆமாம் நான் ஊர் திரும்பும்போது உன்னையும் என்னுடன் ... ...

ஜலா: கூட்டிப்போகிறேன் என்கிறீரா? பார்ப்போமே இன்னும் ஒரு வருடந்தானே இருக்கிறது. பார்ப்போம் பார்ப்போம்! சரி நாழியாகிவிட்டது போவோமா? வாங்கோ சாப்பிட்டுவிட்டுப் பிறகு ஹாஸ்டலுக்குப் போகலாம்.

ராஜா: ஜலா இன்று ஹாஸ்டல்லேதான் மீல்ஸ். என் பிரண்ட் குமார் வேற எனக்காக வெயிட்பண்ணிண்டு இருப்பான் நான் டுமாரோ மார்னிங் மீட்பண்றேன் வரட்டுமா?

ராஜா: ஆல் ரைட் ராஜா. குட்பை!

(தொடரும்.)

---

# இன்பவாழ்க்கை

## [சென்ற மாதத் தொடர்ச்சி]

நவீன நாகரிகப்படி கையில் திரவிய மில்லாதவர்கள் திண்ணைகளில் தையற் கடைகளையும், தட்டாரக் கடைகளையும், அப்பக் கடைகளையும் வைத்துக் குடிக்கூலி வாங்குகிருர்கள். இரவு ஏழுமணிக்கெல்லாம் இடம் என்னுடையது உன்னுடையது என்று போட்டிப் போட்டுக்கொண்டு இல்வாழ்வானே திண்ணைக்கு வந்துவிட்டால் மேற்சொல்லியவர்களுக்கு எங்ஙனம் இடந்தர முடியும்? இன்னும் திண்ணையில் படுப்பவன் கொஞ்சம் கைக்காரனுக இருந்தால் சொல்லவேண்டுவதே இல்லை.

சில வெளியூர் கிராமங்களில் திண்ணையின் மீது படுத்தால் இஃது என்ன சத்திரமா? எழுந்திரு சத்திரத்திற்குப் போ என்று கூறுகிருர்கள். சில குக்கிராமங்களிலும் தங்களுக்கே உபயோகமாகத் திண்ணைகளில் வைக்கோல், உமி முதலிய வஸ்துக்களைப் போட்டுவைக்கவும், உழவுக்குரிய கலப்பை முதலிய சாமான்களைப் போட்டுவைக்கவும், ஆடு மாடுகளைக் கட்டிவைக்கவும், இன்னும் பலவகைக்கு உபயோகித்துக் கொள்ளுகிருர்கள்.

முதல் முதலில் தான் வாழும் இல்லத்தின் ஒரு உறுப்பின் லக்ஷணத்தைப் பார்க்கும்பொழுதே இல்லறத்தானது செய்கை

தற்காலம் வாஸ்தவமாயுமில்லை, போலியாயுமில்லையே! எவ்வாறெனில், நாடக மேடையில் சந்திரமதி வேஷம் தரித்தவனுக்கு உண்மையில் துக்கம் அவன் மனதில் இல்லை என்பது சிறுவர் முதலியோருக்கும் நன்ருகத் தெரியும். ஆனுல் வேஷம் தரித்ததின் பொருட்டு போலிக்காவது துக்கமுள்ளவனைப் போல் நடித்துக் காண்பிக்கின்ருனன்ருே? அதுபோல உபசாரத்திற்கும் இல்லையே! திண்ணை இருப்பதால் திருடு முதலிய துர்க்கிருத்தியத்திற்கு இடமாகிறதென்ருல் பெரியோர்கள் வரையறுத்த வண்ணமில்லாமல் அதிகப்படியாய் சில பேர்வழிகளைச் சுவாமியார் சுவாமியார் என்றும், மெய்க்காத வாதமுதலியதற்கு இச்சித்தும், உள்ளே அழைத்துச் செல்லுவதும், வசிக்க வீடு முதலியது விடுவதும், மற்றுஞ் சிலர் பெண்களைப் பணிவிடை செய்யவிடுவதும் இவைபோன்ற பல அதிகப்படியாய் நடப்பதினுல் அளவுக்கு மீறினுல் அமிர்தமும் நஞ்சாம் என்றபடி நேரும் துர்க்கிருத்தியத்திற்குப் பாத்திரர்களாய்ப் பின்னர் நன்னெறியிற் செல்லும் சாதுக்களையும் பழிக்கக் கங்கணம் கட்டிக்கொள்ளுகிருர்கள்.

சிலர் சுவாமியார் என்று வீட்டிலுள்ள பெண்மக்களை லஜ்ஜையுற்றிருப்பவர்களையும் கட்டாயப்படுத்தி காலில் நமஸ்கரிக்கும்படிச் செய்வது அறியாமையாகும். அஃதன்றியும் ஈஸ்வரனே சுவாமியாராக வந்தாலும் தெய்வம் தொழாதவளாகிய பெண்மகள் தன் கணவனையன்றி ஏனையோர்களை நமஸ்கரிக்க இணங்க மாட்டாள். அதீத பக்தியில் செய்த நாயன்மார்களை ஒப்பிடக்கூடாது. ஆகவே இதுகாறும் இல்லத்தினது லக்ஷணத்தில் ஒன்றைப்பற்றி ஒருவாறு ஆராய்ந்தோம்.

அப்படியே நடை, தாழ்வாரம், கூடம், வாசல் அறைகள் முதலியதும இருக்கவேண்டும். முற்றமென்ற வாசலில் நன்ருகச் சூரிய கிரணம்படும்படி இருக்கவேண்டும். 'வெயில் நுழைந்த வீட்டில் வைத்தியன் நுழையமாட்டான்' என்பது பழமொழி. அஃது அறியாமல் கலியாண கூடம் என்ற வாசலை மூடிவிட்டுக் காற்றுவந்தால் போதுமென்கிருர்கள். கதிரவன் ஒளியால் அநேக குணங்களுண்டு. சிறப்பாக மனை சாத்திரப்படி குருவிலும் புதனிலும் வாசற்படியும், மனையளவிற்குத் தக்கவாறு பூசை அறை, சமயலறை, படுக்கை அறை, கூடம் முதலியதும் அமைத்துக் கொள்ளத் தெரியுமாகையால் ஒவ்வொரு லட்சணங்களையும் விரித்துரைக்கின் பெருகுமென நிறுத்துகின்றேன்.

வாழ்பவனென்ருல் பதின்மர்களையோம்ப, கற்புடைய மனைவியைத் துணையாகக் கொண்டு தருமத்தை நடத்துபவனுகும். ஆகவே, கற்பினது லட்சணத்தையும் மனைவியாகக்கொள்ளும் முறைமையையும் தருமத்தை நடத்தும் விதிகளையும் முறையே பின்னர் ஆராய்வாம்.

பொருள் :—உள்நாடு-மீனவர் சிறு தொழில் அபிவிருத்தி மீன்பிடிக்கும் பயிற்சிப்பள்ளி-வேலையில்லாமை வேலைக்கு அதிகாரிகளுக்கு அனுப்பிய மனு.

படித்துவிட்டு வேலையில்லாக் காரணத்தினால் உண்மையில் பட்டினி கிடக்கும் 23 படித்த மீனவ இளைஞர்களின் பட்டியல் ஒன்றை தங்கள் சமூகத்திற்குச் சமர்ப்பிக்கிறேன். உதவி டைரக்டர் திரு. ஹுசேன் அவர்களின் பொறுப்பின்கீழ் சமீபத்தில் சென்னையில் ஏற்படுத்தப்பட்ட மீன்தொழில் பயிற்சிப் பள்ளியில் (Fishing Training Centre) நேரில் நான் அவரைக்கண்டு கேட்டபொழுது சென்னையில் ஏற்படுத்தப்பட்ட பயிற்சி கடல்ஓர மீனவ இளைஞர்களுக்குத் தான் என்று கூறிவிட்டார். ஆகையால் தயவு செய்து உள்நாட்டு மீன் தொழில் பயிற்சி ஒன்றை சென்னையில் ஆரம்பித்துப்படித்த உள்நாட்டு இளைஞர்களை இதில் பயனடையும்படிச் செய்து நாட்டின் மீன் வளத்தை அதிகப் படுத்தவேண்டும் என்று உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தினசரிப் பத்திரிகையிலிருந்து அரசாங்கத்தார் சிறு தொழிற் சாலைகளை ஏற்படுத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கப் போவதாகச் செய்தி வருவதை நான் அறிகிறேன். அது சம்பந்தமாக 7-1-57ல் வெளியான இந்து பத்திரிகையில் வந்த பிரசுரத்தை இதனுடன் தாங்கள் தெரிந்துகொள்ளுவதற்காக வைத்து அனுப்பியுள்ளேன்.

மீனவர்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் மிகமிக தாழ்ந்த நிலையில் உள்ளார்கள் என்பதையும், அவர்களில் 100-க்கு ஒருவர்கூட படித்தவர் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படிப் படித்த வாலிபர்கள்கூட வேலையில்லாமல் திண்டாடும் நிலையில் இருந்துவருகிறார்கள். மீன் இலாக்காவில் மீனவர்களுக்கு 100க்கு 10 பாகம் உத்தியோகம் கொடுக்கப்படவேண்டும் என்று ஓர் அரசாங்க உத்திரவு இருந்தும் கூட, அதை வற்புறுத்திக்கேட்க, சட்ட சபையிலோ அல்லது கவர்மெண்டு உயர்தர உத்தியோகத்திலோ யாரும் இல்லாத காரணத்தினால் அந்த உத்தரவை மீன் இலாக்கா கவனிப்பதுகிடையாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை ராஜ்ய பர்வதராஜகுல சங்கத்தின் சார்பாக 24-1-57ல் தங்களை தூதுகண்டு பேசியபோது, தாங்கள் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்திற்கு மட்டும்தான் 100க்கு 10 பாகம் ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர மற்ற உத்தியோகங்களுக்கு அல்ல என்று தெரிவித்தீர்கள். அது மிக மனவேதனை ஏற்படுத்தி இருப்பதால், தயவுசெய்து அந்த கவர்மெண்டு உத்தரவின் நகல் ஒன்று அனுப்பவேண்டுகிறேன். கேட்பாரற்ற அனாதைகளாய் படித்துவிட்டு வேலையில்லாமல் பட்டினிகிடக்கும், மீனவ இளைஞர்மீது கருணைகூர்ந்து மீன் இலாக்கவிலோ அல்லது அம்பர்சர்க்கா அபிவிருத்தி திட்டத்திலோ அல்லது சிறு தொழில் அபிவிருத்தி திட்டத்திலோ அவர்களுக்கு வேலை அளிக்கவேண்டும் என்று தங்களை மிகவும் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம் தங்களன்புள்ள,

**A. கோவிந்தசாமி**, காரியதரிசி.




BUY ALWAYS

OUR
BEST
QUALITY

FINE & DELICIOUS
TO DRINK

COFFEE

**RAW, ROAST & GROUND**

OUR SCENTED NUTS—A SPECIALITY

**Sawmy's Coffee Mfg., Co.,**

**262, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1.**

PHONE No. 3687.

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

**777** மார்க்

ரெடி மிக்சர் ரவா தோசை பவுடர்

உபயோகிக்கும் முறை

---

$\frac{1}{8}$ படி தண்ணீரில் $\frac{1}{8}$ படி 777 ரவா தோசை
மிக்சர் பவுடரைக் கலந்து தோசை
செய்யவும்

உப்பு, காரம் எதுவும் சேர்க்கத்தேவையில்லை

**ஸ்ரீ கணேஷ்ராம்ஸ் & கோ.**

*ஸ்ரீ ராமப்பவான் பில்டிங்ஸ்,*

46, தம்பு செட்டி தெரு :: மதராஸ்.


Editor, Printer, Publisher: Sri V. M. Natesam, Goodland & Co.,
55, Muthumari Chetty Street, Madras-1.